"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் 'கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் :1876

சத்தியவேத
பாதுகாவலன்

"கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள் :
ரூபா 9-00
( தபாற்செலவு உட்பட )
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத்தகம் | யாழ்ப்பாணம், 1964-ஆ மாசி மாதம் 1-ந்வ சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 5-ம் இலக்கம்

# கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம்

## லண்டனில்
## மாபெரும் கூட்டம்

**கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம் சம்பந்தமாக லண்டன்மா நகரத்திலுள்ள பேர்பெற்ற ரிறபல்கார் சதுக்கத்தில் ஒரு மாபெரும்கூட்டம் சென்றவாரம் நடந்தேறியது. பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்குச் சேர்ந்த ஆயிரக்கணக்கான புரொட்டஸ்தாந்தகுருமாரும், இல்லறத்தவர்களும், கத்தோலிக்க குருமாரும், விசுவாசிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.**

உவெஸ்றமினிஸ்ரர் அபி என்றழைக்கப்படும் அங்கிளிக்கன் தேவாலயத்தின் பிரதமகுருவான வண. எறிக் அபொட் அவர்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். உவெஸ்றமினிஸ்றரின் கத்தோலிக்க மகாலயத்தின் பரிபாலனர் வண கோடன் வீலர் சுவாமியாரும், புளூம்ஸ் பறி பப்ரிஸ்ற் கோவிலின் கவேட் உவில்லியம்ஸ் பாதிரியாரும், உலக கிறீஸ்தவ மாணவ ஐக்கிய ஸ்தாபனத்தின் தலைவர் பிலிப் பொட்டரும் மேடையில் அக்கிராசனருடன் இடம் வகித்தனர்.

கிறீஸ்தவ ஒற்றுமைக்குச் செபத்தின் அவசியத்தைப்பற்றியும், சம்பந்தப்பட்ட வேறுவிஷயங்களைப்பற்றியும் அக்கிராசனராலும், மற்றைய பிரமுகர்களாலும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

அன்று சாயங்காலம் உவெஸ்றமினிஸ்றர் கத்தோலிக்க மகாலயத்தில் மூவாயிரத்துக்கதிகமானோர் கூடியிருக்க உவெஸ்றமினிஸ்ரர் அதிமேற்றிராணியாரான ஹீனன் ஆண்டகையால் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## அகில உலக
## மேற்றிராணிமாரின் உற்சாகம்

"சரித்திரத்திலே முன்னொருபோதுமில்லாதமுறையில் அகில உலக மேற்றிராணிமார் 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கநிகழ்ச்சிகளினால் உற்சாகமுற்றிருக்கின்றனர்." இவ்வார்த்தைகள் கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமைக் காரியாலயதலைவர் கருதினால் பீய (Bea) அவர்களால் இத்தாலியசர்வகலாசாலை கத்தோலிக்க சேவை அங்கத்தவர்களுக்குக் கூறப்பட்டன. மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்: "மேற்றிராணிமார் ஒவ்வொருவரும் அனுபவத்திருக்கும் இப்புத்துணர்ச்சியானது தரப்போகும் பலாபலன்களின் அளவையும் தன்மையையும் நாம் எவரும் யூகித்துக்கொள்ள முடியாது. பாப்பரசரின் வழுவாவர பிரகடனத்தினால் திருச்சபை அடைந்துள்ள அளப்பரிய பலாபலன்களைப் போலவே, மேற்றிராணிமாரின் புதிய உற்சாகமானது தத்தம் மேற்றிராசனங்களிலும், தேசங்களிலும் நன்மைகளைத் தரப்போகின்றன."

### அத்தனகோறஸ் – 6வது சின்னப்பர்
## மீண்டும் சந்திப்பரா?

கொன்ஸ்தாந்திநோப்பிள் பத்திறியாக்குவாகிய அதிகுரு அத்தனகோரஸ் அவர்கள் 250கோடி தொகையினரை அடக்கிய கிறீஸ்தவர்களின் தலைவர். 6-வது சின்னப்ப பாப்பரசரின் பலஸ்தீன யாத்திரையின்போது அவரைத் திவ்வியபூமியில் தரிசித்து, அளவளாவி, கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமையைப்பற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றார். பாப்பரசர் உரோமாபுரி திரும்பியதும், பத்திறியாக்குவின் உபதலைவர் ஒருவர் பாப்பரசரைச் சந்தித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது, மீளவும் இவ்விருபெரும் கிறீஸ்தவ சபைத்தலைவர்களும் அண்மையில் சந்திப்பார்களா என்னும் வினாவுக்குக் காரணமாக இருக்கின்றது.

### பரிசுத்த தந்தை இவ்வருடம்
## இந்தியாவுக்கு வருவாரா?

1964-ம்ஆண்டு இறுதியில் இந்தியாவில், பம்பாய் நகரில் நடக்க இருக்கும் சற்பிரசாத மகாநாட்டுக்குப் பாப்பரசர் விஜயம் தருவார் என நாம் பெரும்பாலும் நம்பிருக்கலாம் என்ற உறுதி வத்திக்கான் அதிகாரிகளுடைய வாக்கிலும் போக்கிலுமிருந்து பெற்றுக் கொள்ளுகிறோம். பாப்பரசரை இந்தியாவுக்கு வருமாறு இந்திய ராஷ்டிரபதி இராதா கிருஷ்ணன் அவர்கள் விடுத்துள்ள அன்பழைப்பையும் நாம் அறிவோம். இந்தியாவுக்குப் பாப்பரசர் வரும்போது புனித சவேரியாரின் திருயாத்திரைஸ்தலமாகிய கோவைப் பிரதேசத்துக்கும் பிரசன்னம் செய்யலாம் என்ற நம்பிக்கையும் கத்தோலிக்க உள்ளங்களில் எழுந்திருக்கின்றது. இந்தியகருதினால் கிருசியாஸ் ஆண்டகையவர்கள் பாப்பரசரின் விஜயத்துக்காக அயராது உழைத்து வருகின்றார். பாப்பரசர் இந்தியாவுக்கு விஜயம்செய்ய யோசித்துவருகிறார் என்ற செய்தி பரவியதும் அவர் அமெரிக்காவுக்கும், ருஷியாவுக்கும் மறு இடங்களுக்கும் காலவரையில் விஜயம் செய்யக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

## கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமைக்காகப் பாப்பரசர் கண்ணீர் சொரிகிறார்

"கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றிப் பாப்பரசர் கூறிக்கொண்டிருக்கையில் அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தன. அவர் எனது கைகளைப்பற்றிக்கொண்டு நீர் எனக்காக மன்றாடிவாரும். நானும் உமக்காக மன்றாடிவருகிறேன்" என்றார். இவ்வாறு வத்திக்கான்சபை அவதானிகளில் ஒருவராகச் சென்ற அமெரிக்க மெதடிஸ்ற்சபை அதிபரான ரிப்பெட் பாதிரியார் எடுத்துக் கூறியிருக்கிறார். மேலும் பாப்பரசர் கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமை பூர்த்தியாவதற்கு அநேக முட்டுக்கட்டைகள் அகற்றவேண்டி இருக்கிறதாகவும், தமது சீவியகாலத்தில் அது நடைபெற்று முடியாவிடினும் ஒற்றுமைகாணும் நன்னாள் அதிக தூரத்தில் அல்ல என்றும் கூறியதாக அறிவித்திருக்கிறார்.

## நான் மறுஉழவு உழுது விட்டேன்

"வலிதாகக் கிடந்த நிலத்தை பலஸ்தீன யாத்திரையினால் மீளவும் உழுது சற்று மென்மையாக்கியிருப்பதாக உணர்ந்து கொள்ளுகிறேன். நாம் யாவரும் இத்தகைய வேலையைச் செய்வதற்குப்பலஸ்தீனாவுக்குயாத்திரை செய்யத் தேவையில்லை. கிறீஸ்துநாதரின் பிறப்பையும் அவரது சீவியத்தின் சம்பவங்களையும், அவரது உபதேசங்களையும் நன்றாக மனத்தில் பதித்துவைத்திருக்க வேண்டும். திவ்விய சுவிசேஷத்துக்குத் திரும்பிச்செல்வோம் என்பதே எமது சீவியத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும்" எனப் பாப்பரசர் உரோமாபுரியில் கூறினார்.

## சொத்துப் பறிமுதல்

அநியாயமாகக் கொலைசெய்யப்பட்ட வியெட்னும் ஜனாதிபதியின் சகோதரர், அதிமேற்றிராணியார் பீட்டர் ஆண்டகை, அவருடைய இரு சகோதரர்கள், ஸ்ரீமதி நூ, இன்னும் மற்ற 21 பேரின் சொத்து பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று புரட்சிக்காரர் குழு தீர்மானித்துள்ளது. கத்தோலிக்க பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவியளிக்க அதிமேற்றிராணியார் பீட்டர் ஆண்டகையின் முயற்சியால் நிறுவப்பட்ட சங்கங்களும் தங்கள் சொத்தை இழக்கவேண்டும். எவ்வித நீதிமன்ற விசாரணையுமின்றி இது நிறைவேறியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## கிறிஸ்தவ ஒற்றுமை இயக்க வாரம்

இம்மாதம் 18-ந் திகதி துவங்கி 25-ந் திகதி ஈருக மருதனமடத்திலுள்ள கிறிஸ்தவ சேவா ஆசிரமத்தில் கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கவார நிகழ்ச்சிகள் நடந்தேறின. கடைசித்தினமான 25-ந்திகதி சனிக்கிழமை 5 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது அக்கூட்டத்துக்கு தென் இந்திய சபை அத்தியட்சகரான ஆசாரத்துக்குரிய பிஷப் குலேந்திரன் தலைமைதாங்கினுர். மகா மேன்மை தங்கிய ஜே. எமிலியானுஸ்பிள்ளை மேற்றிராணியாரும், சங். டாக்டர் டீ. ரீ. நைல்ஸ் அவர்களும் கிறிஸ்தவ ஒற்றுமையையிட்டு உரை நிகழ்த்தினுர்கள். வெவ்வேறு சபைகளைச்சேர்ந்த பல புரொட்டஸ்தாந்த குருமாரும், இல்லறத்தவர்களும், கத்தோலிக்க குருமாரும், கத்தோலிக்கரும் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

## புதிய மகாநாயக்க தேரோ

கண்டியிலே மல்வத்தைப்பீடத்தின் புதிய மகாநாயக்க தோரோவாகத் தெரியப்பெற்றுள்ள கனம். அமுனுக ராஜகுரு ஸ்ரீவிபாஸி அவர்களைக் கவர்னர்-ஜெனறல் சென்றசனிக்கிழமை சந்தித்துத் தமதுமரியாதையைத் தெரிவித்துநின்ருர். அத்தருணம் மகாநாயக்கதேரோ பேசுகையில்: இன, மத வேறுபாடுகளின்றிப் பொதுநலனுக்காகத் தாம் பாடுபடுவதாகவும், சகல மத விவகாரங்களிலும் அரசாங்கத்திற்கு அவசியமான ஆலோசனைகளைத் தாம் அளிக்கத் தயாராயிருப்பதாகவும் கவர்னர்-ஜெனறலிடம் தெரிவித்தார்.

## பயிற்சி நிலைய இடமாற்றம்

யாழ்ப்பாணத் தொழிற்கந்தோரின் ஆதரவிலே கடந்த நான்குவருடகாலமாக நடைபெற்றுவரும் கட்டடக் கைத்தொழிற் பயிற்சிநிலையம் வருகிற ஆனிமாதம் 15-ந்திகதிவரையிலே நெல்லியடியிலிருந்து முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட விருக்கிறது.

## பேதமின்றிப் பணியாற்றுவேன்

கந்தளாய்ப் புதியபட்டினசபையின் தலைவராகத் தெரியப்பெற்றுள்ள திரு. எச். டி. எல். லீலரத்ன அன்றுபேசியபோது: "சிங்களவர், தமிழரென்ற பேதமின்றிக் கந்தளாய்ப் பட்டினமக்களின் நலனுக்காகப் பணியாற்றுவேன்; வகுப்புவாதத்தை ஆரம்பித்தவர்கள் இறுதியில் அதனுலேயே அழிந்தொழிவார்கள்; இது உண்மை; இதை மனதில்வைத்துப் பாரபட்சமறறமுறையிலே இனஒற்றுமையை வளர்க்கும் முறையில் எனதுகடமைகளைச் செய்வேன்" எனக் கூறலாயினர்.

## ஆசிரியர்களின் ஏமாற்றம்

பலவருடகாலம் சேவைசெய்த காரணமாகத் தலைமையாசிரியர்களாகப் பதவிஉயர்வுபெறக் காத்திருந்த தமிழாசிரியர்களுக்கு அரசாங்கத்தின் தனிச்சிங்கள மொழிக்கொள்கை பெரும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறது. சிங்களமொழியிலே எட்டாம் வகுப்புத் தேர்ச்சியுடையவர்களுக்கே தலைமையாசிரியர் பதவிகள் வழங்கப்படுமென்று கல்விப்பகுதி தீர்மானித்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

## மேற்றிராணியாரின் வாழ்த்து

கண்டி மேற்றிராணியாரான மகாவந். லேயோ நாணயக்கார ஆண்டகை சென்ற சனிக்கிழமையன்று கண்டியிலே மல்வத்தைப்பீடத்தின் மகாநாயக்க தேரோவாகத் தெரியப்பெற்றுள்ள கனம். அமுனுக இராஜகுரு ஸ்ரீவிபாஸி அவர்களைச் சந்தித்து அவருக்கு நல் வாழ்த்துக் கூறிநின்ருர். அப்பொழுது தேரோ அவர்கள் அளித்த பதிலிலே — மதசௌசன்னியத்திற்கு மாருகத் தோன்றியிருப்பதாகத் தெரியும் தற்போதைய போக்குகளிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்வது அவசியமென்றும், இன, மத பேதங்களை ஒழித்து ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்கப் பாடுபடவேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

## தமிழரான பட்டதாரிகள்

வேலையற்றிருக்கும் தமிழர்களான பட்டதாரிகள் ஆபிரிக்காவிலுள்ள கானு நாட்டிற்குப்போனுல் வேலைபெறலாமென்று கல்விமந்திரி தெரிவித்திருக்கின்ருர். கானுவின் தூதராலய செய்திப்படி, கானுவிலே பட்டதாரிகளுக்குச் சுமார் நாற்பது காலிஸ்தானங்கள் இருக்கின்றன; தமிழர்களான பட்டதாரிகள் அங்கு போக விரும்பினுல் தான் அதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்யலாம்; தமிழர்களான விஞ்ஞான பட்டதாரிகள் குறித்தகாலஎல்லைக்குள் சிங்களத்தேர்ச்சி பெறமுடியுமாஞல் சிங்களப்பாடசாலைகளில் அவர்கள் சேரலாமென்றும் அவர் கூறியிருக்கின்ருர்.

## விவசாயப்பயிற்சி வகுப்புகள்

தமிழ்ப்பேசும் இளைஞர்களுக்கென்று தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தாலே உப்புவெளியிலுள்ள தமிழ்ச்சர்வகலாசாலையில் விவசாய- கால்நடை வளர்ப்புச் சம்பந்தமான குறுகியகாலப் பயிற்சிவகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தவகுப்புகளை விவசாய-கால்நடை வளர்ப்புப் பயிற்சிநிலையத்தலைவர் திரு. பி. ஜெகநாதன் அவர்கள் சென்றசனிக்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

## புதிய சபாநாயகர்

சனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராக இதுவரை அச்சபையின் உபசபாநாயகராய் இருந்துவந்த திரு. ஹியூ பெர்ஞண்டோ அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்ருர். தெரிவின்பின்னர் தம்மைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தபோது சிங்களத்தில் மட்டுமல்ல, தமிழ், ஆங்கிலமொழிகளிலும் உரைநிகழ்த்தினுர். அங்ஙனம் பாராட்டிப் பேசியவர்களில் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம், யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிறெட் துரையப்பா ஆகியோரும் அடங்குவார்கள்.

## தேங்காயெண்ணெய் விலை

வெளிநாட்டு வர்த்தகர்கள் சிரத்தையெடாமையாலே இலங்கையில் தேங்காயெண்ணெய்விலை வெகுவாக இறங்கியுள்ளது. தைமாத ஆரம்பத்திலே தொன்ஒன்று 1,070 ரூபாவாக விலைப்பட்ட தேங்காயெண்ணெய் இப்பொழுது 1,030 ரூபாவாக இறங்கியிருக்கிறது.

# இவர் யார்?

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்,
தோன்றலிற் தோன்ருமை நன்று"

என்று கூறிப்போந்தார் நமது வள்ளுவர். உலகில் அநேக மக்கள் பிறக்கின்றனர், வாழ்கின்றனர், இறக்கின்றனர். இவர்களிற் சிலர் தம் பேச்சு வல்லமையாலும், இன்னும் சிலர் தம் கொடைத்திறமையாலும், மற்றும் சிலர் தம் வீரதீரத்தினுலும் புகழைத் தேடுகின்றனர். ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில எழுத்தாளர் இறந்து பல நூற்ருண்டுகள் ஆகின்றன. இருப்பினும் இன்னும் அவர் உயிரோடிருக்கின்ருர் தம்எழுத்துக்களில். நம் திருக்குறளின் தந்தை திருவள்ளுவர் இறந்து எத்தனை நூற்ருண்டுகள்! ஆயினும் திருக்குறளைப் படித்து அதன் பயனை அடைவோர் திருவள்ளுவரை நினையாமலா இருக்கின்றனர்.

நமது திருச்சபையிலும், நமது திருமறையிலும் உண்மையில் பலர் புகழொடு தோன்றியுள்ளனர். அவர்களின்புகழ் இன்னும் கலங்கரைவிளக்கெனத் தணியாமல் இருக்கின்றது. இவர்களில் புனித செபஸ்தியாரைப் போல வேதசாட்சிகளாக உயிர்துறந்தோர் சிலர். புனித பிரான்சீஸ்கு சவேரியாரைப்போல ஊர் உலகம் எங்குஞ்சுற்றி வேதத்தைப் போதித்து அஞ்ஞானிகளை மனந்திருப்பியோர் இன்னும் சிலர். மற்றும் சிலர் புனித தெரேசம்மாளைப்போல், புனித யோண் பேர்க்ஸ்மனைப்போல் வெளி உலகிற் காணப்படாமல் புகழடைந்தோர். இவர்களைப் போலவே நமது புனிதர் அல்போன்சோ றொட்றிகுவெசும்.

புனித றொட்றிகுவெஸ் தம் சிறுபிராயத்தில் நவசந்நியாசமடம் சேரவில்லை. அது கடவுளின் வழியுமல்ல. முப்பத்தெட்டு ஆண்டுகளாக உலகத்திலே சீவிக்கிருர். திருமணம்செய்து இருகுழந்தைகளின் தகப்பனுமாகின்ருர். ஆனுல், அவரின் குழந்தைகள், பச்சிளம் பாலர்கள், இவ்வுலக மாய வலையில் அகப்படாமல், தம் சிறுவயதிலே தம் உண்மையான உறைவிடமாகிய இறைவனிடம் பறந்து செல்கின்றனர். இதன் பின் அவரின் மனைவி கூட மேலோகம் செல்கின்ருள் ஆண்டவரின் அழைத்தல் வந்தவுடன். என்னே கடவுளின் வழி!

இவ்வளவு காலமும் தம்மைப் பெற்றெடுத்து வளர்த்துக் காத்த தமது பெற்ருேரில் அன்பு கொள்ளுகிருர் அல்போன்சோ; தம்முடன் ஒன்று சேர்ந்து அன்பென்னும் கயிருல் கட்டப்பட்ட தன் மனைவியை நேசிக்கிருர்; கண்விழிபோல் காத்துவந்த தனது மக்களை நேசிக்கிருர் அல்போன்சோ. ஆனுல், அவர் நேசித்தவர்களெல்லோரும் மறைந்துவிடுகின்றனர். அவர்கள் இவ்வுலகில் இப்பொழுதில்லை. தம்மைப்படைத்த ஆண்டவரிடம் சென்றுவிடுகின்றனர். இதை நம்புகிருர் றொட்றிகுவெஸ்.

இத்தனை நாட்களும் தம்மையும் தம் குடும்பத்தையும் நேசித்துவந்த இவர், இப்பொழுது உலகிலுள்ள எல்லா மனிதரையும் நேசிக்க ஆசிக்கிருர். மக்கள் எல்லோரும் கடவுளுடையவர்கள்; அவர்களை நான் நேசித்தால் கடவுளையும் நான் நேசிக்கமுடியும். ஆகையால் நான் அவர்களை நேசிக்க வேண்டும். அவர்களைக் கடவுள் பாதம் சேர்க்க வேண்டும் என்று தனக்குள் எண்ணுகின்ருர். நான் ஒரு குருவானவராய் வந்தால் இதை மிகச் சுலபமாய்ச் செய்யலாம் என்று உறுதிகொள்கிருர்

ஆனுல், குருவானவராய் வருவதற்குப் படிப்பு அவசியம். றொட்றிகுவெஸ் இவ்வளவு நாளும் அதிகக் கல்வி கற்கவில்லை. ஆகையால் இப்பொழுது லத்தீன் மொழி படிக்கப் [illegible] என்ருலும் லத்தீன் படிப்பது இவருக்குச் சுலபமாய்த் தோன்றவில்லை. நேற்றுப் படித்த பாடத்தை இன்று மறந்துவிடுவார். அன்றியும் இவ்வளவு ஆண்டுகள் படிக்காத அவருக்கு கல்வி கற்பது மிகவும் கடினமாகத்தான் இருந்தது. ஆகிலும் தாம் தொடங்கிய பாடத்தை மிகவும் துன்பப்பட்டுப் படித்தார். ஓர் ஆண்டு இறுதியில் அவர் படிப்பில் வெற்றியடையவில்லை. என்ன செய்வது! ஆயினும் தாம் ஒரு குருவானவராக வரவேண்டும்; மக்களை மனம்திருப்ப வேண்டும்; அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும்என்ற அந்தஅவா அவரை விட்டு அகலவில்லை. எப்படியும் அவரால் குருவானவராக முடியவில்லை. தாம் என்ன செய்யவேண்டும் என்று கடவுளிடமும், தேவதாயாரிடமும், மற்றும் கல்வி அறிவில் தேறிய குருக்களிடமும் கேட்கிருர். "நீர் ஒரு பரிசுத்த துணைச் சகோதரராகவந்து கடவுளுக்கும், மனிதருக்கும் சேவை செய்யலாம்; கடவுளை அதிகமதிகமாய் நேசிக்கலாம்; என்று அவர்கள் அவருக்குப் பதிலளித்தனர்.

இப்படிக் கடவுளின் வழியை மனிதர்கள்மூலம் அறிந்த றொட்றிகுவெஸ் தமது முப்பத்தெட்டாம் வயதில் நவசந்நியாசமடம் சேருகின்ருர்; ஒரு துணைச் சகோதரராகவும் மாறுகின்ருர். அங்கே கடவுளுடன் ஒன்றித்திருக்க வேண்டுமென்று ஆசித்த இம்மகானின் ஆத்துமம் செபத்திலும், தவத்திலும், மற்றும் வேலைகளிலும், எப்பொழுதும், எந்நாளும் அக்களிப்படைந்தது. யேசுசபை நவசந்நியாசிகள் செய்யும் ஒரு மாதத் தியானத்தில் (ஞானவொடுக்கத்தில்) கடவுளுடன் ஒன்றுபட, அவருடன் எந்நேரமும் நெருங்கிப் பழகத்தெண்டிக்கிருர். நவசந்நியாச உடைதரித்த றொட்றிகுவெஸ் செபத்திலேயே தமது நாட்டத்தைச் செலுத்துகின்ருர். இத்தியானத்தின்போது செபத்திலேயே தமது வாழ்நாட்களைக் கழிக்கவேண்டும் என்று உறுதி செய்கிருர். அதன்படி தமது வாழ்நாள் முழுவதும் அவர் செய்தார் என்பது மிகையாகாது. தனது உறுதியின்படி இரண்டுமணிக்கு மேல் காலையில் செபம் செய்வார். தம்முடைய நாளாந்த வேலைகளின் மத்தியிலும் அவர் செபத்தை மறப்பதில்லை. ஒவ்வொருநாளும் ஏன் ஒவ்வொரு நொடிப்பொழுதும்கூடத் தாம் கடவுளுடன் ஒன்றித்திருக்க வேண்டுமென்று முயற்சிப்பார்; அதற்காக உருக்கமாகவும், பக்தியாகவும் செபவேளையில் தினமும் மன்ருடிவருவார். தமக்கு நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் தம்மிருதயத்தை ஆண்டவரிடம் உயர்த்திச் செபம் செய்வார்; மனவல்லய மந்திரம் ஓதுவார்.

இப்படியே செபத்திலும், தபத்திலும் வளர்ந்துவந்த இச்சகோதரர் தமது இருஆண்டு நவசந்நியாசத்தை முடித்து முதல் வார்த்தைப்பாடுகளை எடுக்கிருர். பிற்பாடு மயோர்க்கா தீவிலுள்ள யேசுசபை மடத்திற்கு அனுப்பப்படுகிருர். அத்தீவிலே தானே தமது மிகுதியான நாட்களைக் கழிக்கின்ருர் அல்போன்சோ. அங்கு அவருக்குக் கிடைத்த வேலையைத் திறம்படச் செய்துவந்தார். மயோர்க்கா மதக்கதவின் அருகில் ஓர் அறையில் இருந்து மடத்தின் உள்ளேவர விரும்புவோர் மணி அடிக்கும் போதெல்லாம் கதவைத் திறந்து உபசரிப்பார்; அவர்களுக்கு உதவிசெய்வார். மணிஓசை கேட்டவுடனே "யேசுவே நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே கதவைப் போய்த் திறப்பார். அவர் எப்பொழுதும் பொறுமையாயும், பூரித்த முகத்துடனும் காணப்பட்டார். அவரின் பொறுமையைக் கண்ட பாடசாலைச் சிறுவர்கள் மணியை வந்து அடித்துவிட்டு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்த கையே அணைத்தது

கோவா (கோவை)நகர் என்றாலே போதும், எவருமே அதன் பெருமையை வருணித்து அதிகம் எழுதவேண்டிய அவசியமேயிராது. சிந்துதேச அப்போஸ்தலர்என்னும் சிறப்புப்பெயர்கொண்டு அழைக்கப்படுகின்ற சிட்ட பிரான்சீஸ் சவேரியாரின் அழியாத் திருமேனியைத் தன்னகத்தே புனிதமிக்க ஒருஞானப்பொக்கிஷம்போல் பூசிதமாகப் பேணிவைத்திருக்கும் காரணமாகக் கத்தோலிக்க உலகமுழுவதிலும் அஃது ஒரு புண்ணிய சேத்திரமாகப் புகழ்பெற்றுத் திகழ்கின்றது.

மேல்முகமாகப் பரந்த நீலக்கடலிலிருந்து வெயிலின் அகோரத்தைத் தணித்துக் குளிர்ந்த தென்றல்வீசித் தவழ்ந்துகொண்டிருக்க, கீழ்முகமாக மலைகள், குன்றுகளிலிருந்து வாசனைமிகுந்த மல்லிகை, முல்லை, ரோசாமுதலாம் மலர்களில்படர்ந்து மந்தமாருதம் வீசிநறுமணம்கமழ்ந்துகொண்டிருக்க, —"பொம் யேசு" ஆதியாம் புராதனப் பெருமைவாய்ந்த பொன்னாலயங்களும், விண்ணளாவிய சிங்கார மாளிகைகளும், புள்ளுறை சோலைகளும், பூங்கமல வாவிகளும், இயற்கை வனப்பையும், செயற்கை வளத்தையும் எடுத்துக்காட்டும் இனியகாட்சிகளும் அணிசெய்து கொண்டிருக்கும் தனியழகுபடைத்த இத்திருநகரில்நிகழ்ந்த — ஓர் உடைபடா முத்திரையை உடைக்க முனைந்தபோது நிகழ்ந்த ஓர் அதிசயநிகழ்ச்சியே ஈண்டு தரப்படுவதாகும்.

கார்த்திகைமதியிலே கோவாநகரின் வானிலையில் ஒருவிதமாற்றம் உண்டாவதால் அதன் சுகாத்தியநிலை குன்றிவிடுகின்றது. ஆனால், இது எப்போதுமே நிகழ்வதன்று. 1934-ம் ஆண்டின் கார்த்திகையிலே பேரபாயத்திற் கேதுவான அந்தச் சாயந்தரவேளைபோன்று காலாகாலத்திலே வானமண்டலத்தில் கார்மேகங்கள்திரண்டு கட்டுக்கடங்காது மட்டுக்கடந்து மழையைப் பொழிந்து பெரும் சுகாத்தியபேதத்தை உண்டுபண்ணும். அன்றுதினமும் சூரியன் வழமைபோல உதயஞ்செய்தான். தனது பொற்கதிர்களைப் பாப்பிப் பூமுகத்தை ஒளிரச்செய்தான். ஆனால், சாயங்காலம் ஐந்துமணிவேளையாய் இருந்தபோதிலும் திடீரென மப்பும், மந்தாரமுமுண்டாய் ஆகாயமுழுவதும் கருமுகில்கள் கவிந்துகொண்டன. கடல் கொந்தளித்துச் சிதறிய பேரலைகள் இரைந்து கரையில் மோதியவண்ணமிருந்தன. இருள்பரந்து எங்கும் இருட்டாயிருந்தது. சோவென்று மழை சோனைமாரியாகப் பெய்துகொண்டிருந்தது. மணிக்கு 50மைல் வேகத்திலே இரவிரவாகச் சுழன்று சுழன்று புயல் வீசிக்கொண்டிருந்தது.

அவ்வாறாக, அந்நகரின்கண் அமைந்துள்ள சான்ஜோஸ்ஆலய பங்குக்குருவர் வண. மாக்ஸ்சுவாமியார் அன்றுசாயந்தரம் தமது விசாரணைப்பங்கைச் சுற்றிப்பார்த்துத் தம்முடைய ஞானமக்களின் சுகசேமங்களை விசாரித்தறிந்துவர ஒழுங்குசெய்து குருமனையிலிருந்து வெளிகொள்ளத் தயாராகிக்கொண்டிருந்தார். ஆனால், எதிர்பாராத கடுங்காற்றும், பெருமழையும் தடையாகவே, அவர் வெளிகொள்ள முடியாதவராய்த் தமது மனையிலேயே தங்கவேண்டியவரானார். அதனால் ஒரு பொழுதுபோக்காகத் தமது விசாரணைப்பங்கின் நானாவித பதிவிடாப்புகளாகிய பழைய சாசனங்களைப் பார்வையிடும் நோக்கமாய் அவைகள் இருந்துவரும் அறைக்குள் சென்றார். அங்கே முன்னாள் பங்குக்கிறிஸ்தவ குடும்பங்களினதும், மற்றும் ஞானஸ்நான, மெய்விவாக, உறுதிப்பூசுதல் ஆதியவற்றினதும் பதிவிடாப்புகள் அடுக்கடுக்காக நிரைப்படுத்தி ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன.

அவைகளைக்கண்ணுற்ற சுவாமியார் தமதுபங்கின் பழையகிறிஸ்தவர்களைப் பற்றிய கடந்தகால வரலாறுகளைப் படித்தறிந்துகொள்வதிலே தம்முடைய நேரத்தைச் செலவிடுவது நல்லகாரியமேயென்று தம்முள் எண்ணியவராய் ஒரு மெழுகுவர்த்தி விளக்கைக்கொண்டு சூழவா நிரைப்படுத்தி வைத்திருந்த பதிவிடாப்புகளின் அடுக்குகளைப் பரிசீலனைசெய்யத் தொடங்கியபோது, எழுந்தமானமாய் அவற்றுளே ஏனையவற்றிலும் அதிகம் தூசிபடிந்ததாய்க் காணப்பட்ட ஒன்றைக் கையிலெடுத்தார். மேற்புறத்தில் "ஞானஸ்நானங்கள், 1820" என்றுவரையப்பட்டிருந்த அதன்பக்கங்களை முதலில் அங்குமிங்குமாகப் புரட்டிப்பார்த்தார். அதன்மேல் ஆராய்வாகப் பரிசீலனை செய்வதற்காகத் தாமதமாய் அதன் ஒற்றைகளைப் புரட்டிப்பார்த்துக் கொண்டிருக்கையில் எதிர்பாராதவிதமாக நடுஒற்றைகளின் மத்தியிலே நன்றாகமடித்துவைக்கப்பட்டிருந்த ஒரு கடுதாசித்துண்டு அவர் கண்ணில் தென்பட்டது. ஆயினும் அதிலே கருத்துக்கொள்ளாது அப்பாலே ஒற்றைகளைப் புரட்டிக்கொண்டிருக்கையில் திடீரென அவர் உள்ளத்தில் ஒருகேள்வி பிறந்தது. "இந்தக் கடுதாசியில் எழுதப்பட்டிருப்பது என்னவாயிருக்கும்?" வினோதப் பிரியத்தாலோ அன்றேல் தமக்குண்டான ஆராய்ச்சியின் அவாவாலோ மடித்தபடியிருந்த கடுதாசித்துண்டிலே எழுதப்பட்டிருப்பதை ஒருதரம் பார்க்கத்தான் வேண்டுமென்ற தீர்மானத்துக்குவந்து அதுவைக்கப்பட்டிருந்த ஒற்றைகளைத் திரும்பப் புரட்டினார். திரும்பவும் அதனைக் கண்ணுற்றார். ஆனால், அதைத் தொட்டதுதான் தாமதம் அவர்கையில் சடாரென ஒருபலமான அடி விழுந்தது.

அடியின் அகோரத்தைத் தாங்கவாற்றாது அந்தட்சணமே அவர்காம் அந்தக் கடுதாசித்துண்டைக்கைவிட்டது. சுவாமியார் ஒருபால் அச்சமும், மறுபால் ஆச்சரியமும் தம்மை ஆட்கொள்ள, இந்தமழைக்கால் இருட்டிலே அறைக்குள்புகுந்து தம்மை அடித்தவரைப் பிடித்துவிடுமாறு கண்களை அகலவிரித்துச் சுற்றுமுற்றும் பார்த்தார். ஏதோ மாயமாய் மறைந்தவர்போன்று எவருமே அங்கு காணப்படவில்லை. அதனால் அவர் சிறிதுவேளை பிரமித்துப்போய் நின்றார். ஒருவேளை கனவாய் அல்லது நனவாய் இருக்கவேண்டும்; ஆம், அப்படித்தான் இருக்கவேண்டுமென்று ஒருவாறு சமாளித்துக்கொண்டாரென்றாலும் அடிவிழுந்த கரத்திலுண்டான நோவைத்தணிக்க மறுகாம் அப்போதும் அதனைத் தடவிக்கொண்டுதான் இருந்தது.

அண்மையிலே கடல்கொந்தளித்துக் குமுறிக்கொண்டும், சண்டமாருதம் போலப் பெருங்காற்று உரமாக வீசிக்கொண்டும், மின்னிமுழங்கி வானம் இடித்துக்கொண்டும், நாலாபுறமும் இரைந்து பெருமழைவிடாது பொழிந்துகொண்டும், ஒரேயொரு மெழுகுவர்த்தி விளக்குமட்டும் எரிந்துகொண்டும், எங்குமே அந்தகாரம் சூழ்ந்துகொண்டும், தன்னந்தனிமையாய்நின்றுகொண்டுமிருக்க, இத்தகைய பயங்கரமான ஒருசூழ்நிலையிலே மாக்ஸ்சுவாமியார் தமது இடதுகையில்விழுந்த அடியோடு பதைபதைத்துத் துடிதுடித்துப் பயப்பிராந்தி கொண்டவராய் நின்றவிடமும்தெரியாது நினைவிழந்தவராய் அறையைவிட்டு ஓரேபாய்ச்சலாய் ஓடித் தப்பியிருப்பாரென இந்தவேளை எவருமே அறிகிலோம். ஆனால், அவரோ பயப்பிராந்தி கொள்ளவில்லை. பயந்தோடிப் போகவில்லை. அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்போலத் திடசித்தமாக நின்றார். "இந்தக் கடுதாசித்துண்டில் கைவைக்கப் போய்த்தானே அடிவிழுந்தது; ஆகவே, இதில் ஏதோ அந்தரங்கம்ஒன்று இருக்கத்தான் வேண்டும்; அதனை எந்தவிதமும் அறியத்தான் வேண்டு"மென்று திடசங்கல்பம் செய்துகொண்டு, இம்முறை தமது வலதுகாத்தால் எடுக்கநினைந்து அதிலேகையை வைத்ததுதான் முன்னர் நிகழ்ந்ததுபோல, ஆனல், முன்னிலும் வேகமான அடிஒன்று மளாரென விழுந்ததே அதிகம் வேதனை அடைந்தவராய் அதிகம் வேகமாக அதனை எடுத்துவிட்டுச் செய்வதறியாது திகைத்தார். மலைத்தார். சிந்தை கலங்கினார். கடல்அலைகள்போல அவர்மனதில் எண்ண அலைகள் குமுறத்தொடங்கின.

(வளரும்)

# ஐக்கிய திருச்சபை நிறுவுதலும் நமது கடமையும்

"ஐக்கிய திருச்சபை", "ஒன்றிக்கப்பட்ட திருச்சபை," "திருச்சபையின் (சபைகளின்) ஒற்றுமை"என்ற வார்த்தைகள் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தைக் காலஞ்சென்ற பரிசுத்த தந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் நிறுவிய காலந்தொட்டு உலகமெங்கும் அடியுண்டு, மக்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. ஐக்கியதிருச்சபை நிறுவுதலைப் பற்றி ஆர்வமாக உலகின் நானுபாகங்களிலும் பகிரங்கமாகப் பலசமாகமங்களை நடத்தி, ஆலோசனைகள் பல செய்து, அப்பணியில் இன்று எல்லோரும் ஊக்கத்துடன் உழைத்துவருகின்றனர்.

அருளப்ப பாப்பரசர் 1962-ம்ஆண்டு நிறுவிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை எடுத்தாலென்ன, திருச்சபையில் ஒரு புதிய சகாப்தமென்று எண்ணப்படும் ஆறுவது சின்னப்பருடைய பரிசுத்த நாடாகிய பலஸ்தீனுவுக்கு இவ்வாண்டு செய்த புனித யாத்திரையை நோக்கினுலென்ன, பலவித இதாகிறீஸ்தவசபைகள் நடத்திவருகின்ற அகில உலக சமாகமங்களை அவதானித்தாலென்ன (இவை மொன்றீல், ரொறெண்ரோ என்ற நகரங்களில் சென்ற ஆண்டில் நடைபெற்றன) இவை யாவும் ஒரு முக்கிய நோக்கத்தையேயுடையன.

யேசுக்கிறீஸ்துநாதர் ஒருவர். அவர் போதித்த சத்தியங்கள் யாவும் ஒன்றே. அவர் ஸ்தாபித்த தேவதிரவிய அனுமானங்கள் யாவும் ஒன்றே. ஆகவே அவருடைய உண்மையான போதனைகளை அனுசரிக்கும் சமயங்கள், சபைகள் யாவும் எவ்வித முரண்பாடுமின்றி ஒற்றுமைப்பட்டிருக்க வேண்டுமன்றோ. மேலும் போதனைகள், ஆளுகை முதலியவற்றில் வேற்றுமைப்பட்டிருக்கும் சபைகள், ஒரே சத்தியங்களை அனுசரிப்பவை யாவும், யேசுக்கிறீஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரே திருச்சபையாயும் இருக்கமுடியாது என்பதும் வெளிப்படை அன்றோ.

இதை நன்குற்றுணர்ந்த கிறீஸ்தவ திருச்சபைத் தலைவர்கள் மேல்நாடுகளிலும், கீழ்நாடுகளிலும் றோமான் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராயிருந்த காலஞ்சென்ற 23-ம்அருளப்ப பாப்பரசர் தலைமையில் இந்நிலையை— பரிதாபகரமான நிலையை — விசனிக்கத்தக்க நிலையை அலசிஆராயத்தொடங்கினர்.

அவர் 1959-ம் ஆண்டு ஆனிமாதம் 29-ம்திகதி உலகமடங்கலுக்கும் வெளியிட்ட சரித்திரப் பெருமைவாய்ந்த சுற்றுநிருபத்தில் "ஒரே மேய்ப்பனும், ஒரு மந்தையும் உலகில் வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் "இவ்வெண்ணமே இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை நிறுவும்படி நம்மைத் தூண்டியது" என்றும் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

அவருடைய குரலொலியை அன்புடனும், அனுதாபத்துடனும் (கத்தோலிக்கரும், பிறகிறீஸ்தவசபை அங்கத்தினரும்)கேட்டனர். அதற்கு அமோகமான ஒரு வரவேற்பும் அளித்தனர். அன்று தொட்டு அதைப்பற்றி ஆழமாக ஆலோசிக்கத் தொடங்கினர். அந்நோக்கத்திற்காக எல்லாக் கிறீஸ்தவர்களும் (அன்றுதொட்டு) செபதபதானதரும முயற்சிகளைச் செய்துவருகின்றனர். பொதுச்சங்கத்தில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றிக் கவனமாகக் கேட்டோ, வாசித்தோ விளங்கிவருகின்றனர். விரைவில் நாமெல்லோரும் ஆசிக்கும் இவ்வொற்றுமை ஏற்படும் என்று பூரணமாகநம்பி வாழ்கின்றனர்.

மதப்பிரச்சினைகள் யாவும் மனதைப் பொறுத்தனவையே எனலாம். "மக்களின் மனத்திலேயே போர்கள் ஆரம்பிக்கின்றன" (Warsare made in the minds of men), என்று ஒரு பிரபல்ய சமூகநூல் எழுத்தாளர் குறிப்பிடுகிறார். "ஒன்றே யேசுக்கிறீஸ்து, ஒன்றே திருச்சபை என்று ஐக்கியமாக வாழவேண்டிய கிறீஸ்தவர்களாகிய நாங்கள் பலநூற்றுக் கணக்கான கிறீஸ்தவச் சபைகளாகவும் வேறுபிரிவினைச் சபைகளாகவும் பிரிந்து இருப்பது வெட்கத்துக்குரியதன்றோ. இதற்குக் காரணம்தான் என்ன? நமதாண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் போதனைகள்தான் இதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. ஆனல், மக்களின் தனிப்பட்ட சாதனைகள் என்றே சொல்லவேண்டும்.

சென்றவருடம் கிறீஸ்தவ திருச்சபைகளின் அகிலஉலக சங்கத்தின் மகாநாடு ஒன்று மொன்றீலில் நடைபெற்றது. அதில் 100 தேசங்களிலிருந்து 212 திருச்சபைகளைச்சேர்ந்த 3500 இலட்சக் கிறீஸ்தவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்று வாசிக்கிறோம். (தை 18-ந்திகதி வெளிவந்த "கதலிக் மெசன்ஜர்" என்ற பத்திரிகையில் இதைப்பற்றி இலங்கை அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த மகாவந். கறல்ட்டி சொய்சா குறிப்பிட்டிருக்கிறார்). இவர்களும் திருச்சபைகளின் ஒற்றுமையைப் பற்றியே கலந்தாலோசித்தனர். இவ்வாறு உலகம்முழுவதிலும் திருச்சபைகள் யாவும் ஒற்றுமைப்பட்டு ஒரே திருச்சபையாகத் திகழவேண்டுமென்ற கிளர்ச்சி எழும்பியிருக்கிறது. அதற்காகப் பலவித முயற்சிகள் உலகின் பலபாகங்களிலும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. இச்சந்தர்ப்பத்தில், இந்த அரியதருணத்தில் இப்புனித காலத்தில், றோமான் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த கிறீஸ்தவர்களாகிய எங்களுடைய கடமைகள் தான் எவைஎனச் சற்றுச்சிந்தித்தல் பயனுடைத்தாகும்.

**முதன் முதலாக** இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் **(1962-ம்ஆண்டில் இது ஆரம்பமாயிற்று.)** சித்திக்காக நாம் அனுதினமும் மன்றாடவேண்டும். பரமண்டல மந்திரத்தில்வரும் உம்முடைய இராச்சியம்வருக" என்ற பகுதியை விசேஷமாக இந்நோக்கத்திற்காகச் செபிக்கலாம். இச்சங்கத்தில் நடைபெறும் சம்பவங்களை அவதானமாக வாசித்தறிந்து(இதற்குச் சத்தியவேதபாதுகாவலன் பத்திரிகை அருந்துணைபுரியும்) அதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைத் திருச்சபையின் ஒற்றுமைக்காக நாங்கள் நல்மனது

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**மாசி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 2 | ஞா. | சடிகைஞாயிறு, கர்த்தரின் காணிக்கை | [வெ] |
| 3 | தி. | காலதினம் | [ஊ] |
| 4 | செ. | இலங்காநாயகி திருநாள் | [வெ] |
| 5 | பு. | அர்ச். ஆகத்தம்மாள் | [சி] |
| 6 | வி. | அர்ச். தித்தூசப்பர் | [வெ] |
| 7 | வெ. | அர்ச் ரொமுவால்தப்பர் | [வெ] |
| 8 | ச. | அர்ச். மாத்தா அருளப்பர் | [வெ] |

சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு மாசி மாதம் 1-ந் திகதி

# வண. தோமஸ் சுவாமியார்

" ஓர் சின்னஞ் சிறிய அன்புக் கிரிகையின் பலன் மற்றைய எல்லா நற்கிரிகைகளும் ஒருங்கே சேர்ந்து அளிக்கும் பலாபலன்களிலும் பார்க்க மேலானது'' என்பது லிசியேநகர்ன் அர்ச்சியசிஷ்டரான சின்னத் தெரேசாளின் குறிக்கோள்.

தமது கார்மேல்மட எல்லைக்கப்பால் அடிஎடுத்து வைக்காமல் இந்த இளங்கன்னிகை தமது "சின்னவழி''யால் அநேகாநேக ஆத்துமாக்களின் இரட்சணியத்தை நிச்சயப்படுத்தினுள். அந்தச் "சின்னவழி''தான் அன்பின் வழி.

இவ்வார ஆரம்பத்தில் பரிசுத்ததனத்தின் நறுமணங் கமழ இவ்வுலகை நீத்த தோமஸ் சுவாமியார் தமது குருத்தொண்டின் 52 வருடகாலத்தில் எப்பகுதியிலாவது வேதத்தைப் பரப்பும் வெளிவேலையிற் செலவழிக்கவில்லை. பங்குக்குரவராகத் தொண்டாற்றவில்லை. இருதயங்களை உருக்கும் பிரசங்கங்கள் செய்யவில்லை. இலைமறைகாய்போல் ஓர் மறைந்த குரவராகவே சீவித்துவந்தார். ஆனுல், அவர் மூலமாக நாம் அடைந்துள்ள வரப்பிரசாதங்களும், தேவ ஆசீர்வாதங்களும் வரையறுக்க முடியாது. தோமஸ் சுவாமியார் நடந்தவழி என்ன? சின்ன வழி—அன்பின் வழி.

தமது குருத்துவ சீவியத்தின் மூன்றிலொரு பங்கைத் தாம் கல்வி பயின்ற கல்லூரியிலேயே ஆசிரியராகவும், கத்தோலிக்கரல்லாத உள்மாணவரின் விடுதிச்சாலை அதிபராகவும் கழித்த காலத்தில் அவர்செய்த அளவிறந்த அன்புக்கிரிகைகளுக்கு அவரால் பயிற்றப்பட்ட ஆயிரக்கணக்கான பிறசமய மாணவர்கள் இன்றும் சான்று பகர்வர். அவர்களில் அதிகப்பற்ருனோர் சான்ரோராகத் திகழ்வது தோமஸ் சுவாமியாரின் அன்பின் வழியின் சித்திக்கு ஓர் அத்தாட்சி.

சுவாமியாரின் அதி உன்னதவேலை அவர் ஸ்தாபித்த செபமாலைத்தாசர் சபையென்று சொல்லாமலே தெளிவாகும். இச்சபையை ஸ்தாபிப்பதிலும், வளர்ப்பதிலும் கடந்த 36 ஆண்டுகளாக அவர் செபித்த செபங்களும், செய்த கடுந்தபங்களும், சிந்திய வெயர்வை, கண்ணீர். இரத்தமும் எவ்வளவென்று தேவனுக்கு மாத்திரம் தெரியும். இந்தச் சபையின்மீதும், இதன்மூலமாக, எங்கள் நாட்டின்மீதும், எங்கள் எல்லோர்மீதும் தேவன் தமது இரக்கத்தை மாரியாகப் பொழிந்து வருகிருரென்பது வெளிப்படை.

"உங்கள் சபைச்சீவியத்தை மானிடசுபாவம் தாங்காது. மனிதர் நித்தியமவுனம் காப்பார்களென்றும், நாளாந்த உபவாசம் செய்வார்களென்றும் தங்கள்நேரத்தை அதிகப்பற்ருகத் தியானத்திலும், செபத்திலும் செலவழிப்பார்களென்றும் எதிர்பார்ப்பது மடமைத்தனம்'' என்று சொன்னவர்களுக்கு அவர் கொடுத்த பதில் என்னவென்ருல், "அப்படியாகில் நாங்கள் கிறிஸ்துநாதருக்காக மடையர்களாவோம். இகலோக ஞானம் பரலோக அஞ்ஞானம்'' என்பதே. செபமாலைத்தாசர் சபையின் தற்போதைய நிலைமை சுவாமியாருடைய வார்த்தைகளின் உண்மையை நிரூபிக்கிறது.

உலக சரித்திர வரலாற்றின்படி தேவன் பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில் காலத்துக்கும், தேசத்துக்கும் தேவையான புண்ணியவான்களையும், ஞானிகளையும், தலைவர்களையும் அனுப்பிக்கொண்டே வந்திருக்கிருர். உலகப்பற்றுதல், செபதபத்தில் வெறுப்பு கூடிக்கொண்டும், பிறர்சிநேகம், தாழ்மை, அமைச்சல் ஆதியாம் புண்ணியங்கள் குன்றிக்கொண்டும், அநீதிபரவிக் கொண்டும்வரும் இக்காலத்திலே எங்களைத் திருத்தி நல்வழி காட்டத் தேவனுல் அனுப்பப்பட்ட அன்பின் தூதுவர் தோமஸ் சுவாமியாரென்ருல் மிகையாகாது.

இந்த அரும்பெரும் குருமுனியை இழந்து துயருறும் நம் மேற்றிராணியார், சகோதர குருமார், செபமாலைத்தாசர், கன்னியர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்ரேம். தேவன் அவருக்கு நித்தியசம்பாவனை அளிப்பாராக.

# மரியன்னையும் திருச்சபையும்

அவனியின் மீட்பரைப் பெற்றெடுத்தாள் அமலனின் அன்னைமாமரி. உருவில்லான் உருவாக உதவியளித்து அவரை ஈன்றதால் தேவனின் திருத்தாயாரானுள் கன்னிமாமரி. முதல் ஏவாள் எங்கள்முதல்அன்னை. அவளின் கீழ்ப்படியாமையால் அனைத்துலகுக்கும் மரணம் வந்தது. இரண்டாம் ஏவாள் எங்கள் இரண்டாம் அன்னையாகிய மாமரி. மரியின் தாழ்ச்சியாலும், கீழ்ப்படிவாலும், மாந்தருக்கு சீவியம் திரும்பி வந்தது. மரியாய் கிறிஸ்துவின் இயற்கை அன்னை (Physical mother). திருச்சபை கிறிஸ்தவர்களின் ஞான அன்னை. இருளில் இருந்த உலகுக்கு, உலகின் ஒளியாகிய கிறிஸ்துவள்ளலைக்கொண்டு வந்தாள் மரியன்னை. திருச்சபையும் உலகின் இருளை ஒழிக்க உலகின் ஒளியாகிய கிறிஸ்துநாதரை நற்செய்தி மூலம் உலகுக்குக்கொண்டு வருகிறது. இருளில் கலங்கரை விளக்கு தனது ஒளியால் வழிப்போக்கர்களுக்கு வழியைக் காட்டுகிறது. அவ்வண்ணமே கிறிஸ்துவின் மறை உடலான திருச்சபையும், பாவச்சேற்றில் மிதக்கும் மனுக்குலத்துக்குத் தனது பிழையில்லாத, உண்மையான படிப்பினையால் மோட்சபாதையைக் காட்டுகிறது. மரியன்னை எப்படி யேசுநாதரைப் பெற்றெடுத்து, பேணிவளர்த்து, விண்ணுலக தந்தைக்கு உகந்தபலிப் பொருளாக யேசுநாதரை ஆயத்தம் செய்தாளோ, அவ்வண்ணமே எங்கள் மாதாவாகிய திருச்சபையும், ஞான முழுக்கால் எங்களை மறுகிறிஸ்துவாகப் பெற்றெடுக்கிருள். தேவநற்கருணை என்னும் பரலோக மன்னுவால் எங்களைப் போஷிக்கிருள். உறுதிப் பூசுதலால் உறுதிப்படுத்துகிருள். பாவம் என்னும் நோயால் வருத்தப்படும்பொழுது பச்சாத்தாபத்தினுல் எங்களைச் சுகமாக்குகிருள். விண்ணுலகத்தந்தைக்கு உகந்தவர்களாய்வர எங்களுக்கு உதவியளிக்கிருள்.

### கன்னிமை குன்ருமாமரியும், கன்னிமை குன்ருத் திருச்சபையும் :

மரியன்னை முப்பொழுதும் கன்னிகையாய் இருந்தாள். யேசுவைப் பெறமுதலும், பெறும்பொழுதும், பெற்றபிற்பாடும் கன்னிகையாய் இருந்தாள். திருச்சபையும் கன்னிகையானவள். கிறிஸ்துவின் நாயகியாய் இருக்கிருள் திருச்சபை. "நான் உம்மைக் கிறிஸ்துநாதருக்கே அளித்துவிட்டேன். கிறிஸ்துநாதர் மாசற்றவராயும், தூய்மையானவராயும், களங்கமில்லாதவராயும் இருப்பதுபோல் நீரும் இருக்க வேண்டும்''எனத் திருச்சபையைப் பார்த்துச் சொல்கிருர் மாபெரும் அர்ச். சின்னப்பர். கிறிஸ்துநாதரின் படிப்பினையின்மேல் விசுவாசமாய் இருப்பதால் திருச்சபை கன்னிகையாயிருக்கிறது.

### தாய்த்தன்மை :

மரி எங்கள் அன்னை. திருச்சபையும் எம் அன்னை. மரியும் திருச்சபையும் முழுக்கிறிஸ்துவின் அன்னை. திருச்சபை விசுவாசிகள் அனைவரின் ஞான அன்னை. அவ்வண்ணமே மரியன்னையும் எல்லாக்கிறிஸ்தவர்களின் ஞான அன்னை. மரியன்னை எங்கள் ஒவ்வொருவரின்பேரில், கிறிஸ்துநாதரின் தாயாகவரத் தமது சம்மதத்தைத் தெரிவித்தாள். மன்னுதிமன்னன் மண்ணவர்களின்மேல் கொண்ட அன்பினுல் சிலுவையில் மரணிக்கும்பொழுது தமது அன்னையை எங்களுக்கு அளித்தார். அர்ச். அருளப்பருக்கு "இதோ! உன் அன்னை'' என்ருர். அர்ச். அருளப்பர் எங்கள் அனைவரின்பேரில் மரியன்னையைத் தமது தாயாக ஏற்றுக்கொண்டார்.

### திருச்சபை விசுவாசிகளின் அன்னை :

திருச்சபை கிறிஸ்துவின் ஊடுருவப்பட்ட விலாவில் இருந்து பிறந்தது என அர்ச். தோமாஸ் அக்குயீனுஸ் என்னும் மாபெரும் இறைநூல் வல்லுனர் கூறுகிருர். கிறிஸ்துவின் ஊடுருவப்பட்ட விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் குபீர் என்று பாய்ந்தன. இரத்தம் தேவநற்கருணையைக் குறிப்பிட்டது. தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டது. ஒரு மாது உயிரை பிள்ளைக்கு அளிப்பதால் அன்னையாக மாறுகிருள். அவ்விதமே திருச்சபையும் ஞானஸ்நானத்தால், ஞான உயிரை அளிப்பதால் ஞான அன்னையாய் வருகிருள்.

### அருள்நிறைந்த மாமரியும் திருச்சபையும் :

மரியன்னை கிறிஸ்துவின் தாயாக வருவதற்கு இறைவன் எல்லாவிதமான வரப்பிரசாதங்களையும் அவளுக்கு அளித்திருந்தாள். மரியாய் மிகவும் கடவுளால் நேசிக்கப்பட்டவள், ஆசீர்வதிக்கப்பட்டவள், திருச்சபையும் அருள் நிறைந்தவள். திருச்சபையும், மரியன்னையும் பரிசுத்தமானவர்கள். ஏனெனில், பரிசுத்தமானவராகிய யேசுக்கிறிஸ்துநாதரோடு நெருங்கிய உறவு கொண்டாடுபவர்கள்.

### கிறிஸ்துவின் அன்பு :

கிறிஸ்துநாதர் எப்படித் தமது அன்னையை நேசித்தாரோ அப்படியே திருச்சபையையும் நேசிக்கிருர். ஒருவனும் தனது மாமிசத்தை வெறுப்பதில்லை—ஆனுல், நேசிக்கிருன். கிறிஸ்துநாதர் திருச்சபையின் தலைவர், அவரின் மறை உடல் திருச்சபையே. எனவே, கிறிஸ்துநாதர் திருச்சபையை நேசிக்கிருர். நித்திரை செய்த முதல் ஆதாமின் விலாவிலிருந்து தோன்றினுள் ஏவாள். அவளை ஆதாம் நேசித்தான். 'இவள் என் எலும்பின் எலும்பாகவும், என்சதையின் சதையுமாக இருக்கிருள்.'' அவ்வண்ணமே மாணிக்கும் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் விலாவிலிருந்து இரண்டாம் ஏவாளாகிய திருச்சபை தோன்றினது. எனவே, கிறிஸ்துநாதர் திருச்சபையை நேசிக்கிருர். மரியன்னையின் பக்தர்கள் கிறிஸ்துவின் பக்தர்களாய் இருப்பார்கள்; மரியன்னையின் அன்பர்கள் திருச்சபையின் அன்பர்களாய் இருப்பார்கள். தேவஅன்னையின் உண்மைப்பக்தர்கள் திருச்சபையின் உண்மைப்பக்தர்களாய் இருக்காமல் இருக்கமுடியாது. கிறிஸ்துவை ஆராதிப்போம். மரியன்னையை நேசிப்போம். திருச்சபையை வளர்ப்போம்.

வாழ்க மாமரி! வாழ்க திருச்சபை!

( வி. அன்ரனி ஜோண் )

# இங்கிலாந்துக்கு பாப்பரசரின் புதிய தூதுவர்

ஒகரா ஆண்டகையவர்களின் பின் இங்கிலாந்தின் பாப்பரசரின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட காடினுல் ஆண்டகையவர்களுக்கு இம்மாதம் 20-ம்திகதி, உவெஸ்மினிஸ்ரர் தேவாலயத்தில் அந்நாட்டு அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், குருமார். விசுவாசிகளினுல் மகத்தான ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபதமடைந்த வண. பிதா B. A. தோமஸ், O.M.I. அவர்கள்

**தோலகட்டிச் சுவாமியார் என்று எல்லோராலும் அன்பு வணக்கத்துடன் அழைக்கப்பட்டு வந்தவரும், செபமாலைத்தாசர், செபமாலைக் கன்னியர் சபைகளின் ஸ்தாபகரும், கடந்த 52 ஆண்டுகளாகத் தமது செப தபங்களினாலும், பரிசுத்த சீவியத்தினாலும் எல்லோருக்கும் ஒரு மகாசிறந்த மேல்வரிச் சட்டமாகவும், ஞானம் நிறைந்த வழி காட்டியாகவும் யாழ்ப்பாணத் திருச்சபை உத்தியானத்திலே ஒரு நவதாரகைபோற் துலங்கி இருந்த வண. B. A. தோமஸ், O.M.I. அடிகளார் சென்ற ஞாயிற்றுக்கிழமை 26-ம் திகதி அதிகாலையில் யாழ்ப்பாண மேற்றிராசன இல்லத்தில் நித்திய நித்திரையாயினார். மரிக்கும்போது இவருக்கு வயது 78.**

### ஆயத்தகாலம்


வண. வஸ்தியாம்பிள்ளை அன்ரனி தோமஸ் சுவாமியார் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பாண்டியன்தாழ்வுப்பகுதியில் ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பத்தில் 1886-ம் ஆண்டு பங்குனி 7-ந் திகதி பிறந்து சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்றார். அதன்பின் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்து, யாழ்ப்பாணம் அர்ச். மாட்டீனார் குருமடத்தில் சேர்ந்து, அங்கேயும் கொழும்பு அர்ச். பேர்னாட் குருமடத்திலேயும் வேதசாஸ்திரங்கள் கற்று 1912-ம் ஆண்டு தைமாதம் 6-ந் திகதி குருவாக அபிஷேகிக்கப்பட்டார். அவருடன் குருப்பட்டம்பெற்ற வண. எஸ். இம்மானுவல் சுவாமியாரும், வண். பி. நிக்கலஸ் சுவாமியாரும் இரு வருடங்களின்முன்னே வண. தோமஸ் சுவாமியாருடன் ஒருங்கே தங்கள் யூபிலியைக் கண்டுகளித்தனர்.

### கல்லூரி ஆசிரியர்

குருவாகியபின் 16 ஆண்டுகளாக தோமஸ்சுவாமியார் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியராகவும், அக்கல்லூரியிலே கல்விகற்ற கத்தோலிக்கரல்லாத மாணவரின் விடுதிச்சாலை அதிபராகவும் தொண்டாற்றினார். எளிமையும், தாழ்மையுங்கொண்ட தமது சீவியத்தினாலும், தற்பரித்தியாகத்தினாலும் மறுசமயப்பிள்ளைகளின் வணக்கத்தையும், சாந்தகுணம், அன்பு, புன்முறுவல், இன்மொழியால் அவர்களின் அன்பையும் அமைச்சலையும் பெற்றார். சுவாமியாரிடம் கல்விபயின்ற அல்லது அவரின் விடுதிச்சாலையில் தமது மாணவநாட்களைக்கழித்த ஆயிரக்கணக்கான மறுசமயப் பிள்ளைகளில் எவராவது சுவாமியாரைத் தங்கள் பிற்சீவியத்தில் மறக்கவே இல்லையென்று ஐயமின்றிக் கூறலாம். அவர்களில் பலர் தற்போது பற்பல துறைகளில் சீராகவும், சிறப்பாகவும் தங்கள் சீவியத்தை நடாத்தி வருவதற்குக் காரணம் தோமஸ்சுவாமியாரின் முன்மாதிரிகைதான் என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்வது வழக்கம். அநேகர் தங்கள் லீவுநாட்களைக் கழிக்க யாழ்ப்பாணம் வரும்போது சுவாமியாரைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை.

### செபமாலைத்தாசர் சபை ஸ்தாபகர்

1926-ம் ஆண்டு பதினொராம் பத்திநாத பாப்பரசர் விடுத்த "றேரும் எக்ளேசியே" எனும் நிருபத்தில் மிஷன் நாடுகளிலே தியானசபைகளை ஸ்தாபிப்பதின் அவசியத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். பரிசுத்த தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் அக்கால யாழ்ப்பாண மேற்றிராணியாரான கியோமர் ஆண்டவர் தோமஸ் சுவாமியாரை அழைத்து அவ்விதசபையொன்றை யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொண்டார்.



இதன்பயனாக 1928-ம் ஆண்டில் தோமஸ் சுவாமியார் 6 நவசந்நியாசிகளுடன் தோலகட்டியில் செபமாலைத்தாசர் சபையை ஸ்தாபித்தார். தற்போது இச்சபையில் 6 குரவர்களும் 80 சந்நியாசிகளும் உளர். இலங்கையிலே ஒன்றும் இந்தியாவிலே மூன்றுமாக 4 ஆசிரமங்களில் இவர்கள் ஊழியம் புரிகின்றனர்.

### செபமாலைக் கன்னியர் சபை

பலவருடங்களாகப் பெண்களுக்கும் ஒருதியானசபையை ஸ்தாபிக்கத் தோமஸ்சுவாமியார் ஆவலாயிருந்தார். மூன்றுமுறை எத்தனித்தும் சித்தியடையவில்லை. கடைசியாகத் தமது விடாமுயற்சியினாலே 1950-ம் ஆண்டு வசாவிளானிலே செபமாலைக் கன்னியர்சபை மடமொன்றை உருவாக்கினார். தற்போது இலங்கையிலே இரண்டும் இந்தியாவிலே ஒன்றுமாக 3 மடங்களுண்டு. இவைகளிலே ஊழியம்செய்யும் கன்னியரின்தொகை 100.

### நோயாளியாகிறார்

வண. தோமஸ் சுவாமியார் எக்காலத்திலாவது நல்ல சரீரசுகம் அனுபவித்தவரல்ல. எப்போதாவது தனது சுகத்தையிட்டு எவ்வித அக்கறை எடுத்தவருமல்ல. 1959-ம் ஆண்டிலிருந்து அவருக்கிருந்த அற்பசுகமும் படிப்படியாகக் குன்றிக்கொண்டே வந்தது. சுவாமியார் தமது இளமை தொட்டுச் செய்துவந்த கடுந்தபசுகளும், தற்பரித்தியாகச் செயல்களும், தமது சபைகளின் தாபரிப்புக்கும், வளர்ச்சிக்குமாக அவர்செய்துவந்த இடைவிடா வேலைகளும் அவரின் முதுமைப்பராயத்தில் அவரைப்பலமாகப் பாதித்தன. இதன்காரணமாக 1962-ம் ஆண்டில் அவர் மேற்றிராசன இல்லத்துக்குக் கொண்டுவரப்பட்டார். சென்ற சிலமாதங்களாக வெகுவாக வருத்தப்பட்டாலும் சந்தோஷத்துடனும், பொறுமையுடனும் தேவசித்தத்துக்குப் பணிந்தமனதுடன் முடிவை எதிர்நோக்கியிருந்தார்.

### இறுதிச்சடங்குகள்

26-ந்திகதி முற்பகல் சுவாமியாரின் புனிதஉடல் மேற்றிராசன இல்லத்திலிருந்து தோலகட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே ஆயிரக்கணக்கானமக்கள் கூட்டங்கூட்டமாகச்சென்று மறைந்தகுரவருக்குத் தங்கள்இறுதி அஞ்சலி செலுத்தி, அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொண்டார்கள். 27-ந்திகதி திங்கட்கிழமை ஆசிரமச் சிற்றாலயத்தில் யாழ்ப்பாணட்பகுதியின் எல்லாக்கோணங்களிலுமிருந்து வந்துகுழுமியிருந்த குருப்பிரசாதிகள், துறவிகள், கன்னியர்கள், பல்லாயிரக்கணக்கான மக்களின் சமுகத்தில் காலை 7-30மணிக்கு மகாமேன்மை தங்கிய யாழ்ப்பாண மேற்றிராணியாரால் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் பட்டபின் குரவரின் புனிதஉடல் ஆசிரம தோட்டத்தின் வடபாகத்தில் தயாரிக்கப்பட்டிருந்த புதியகல்லறைக்குச் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது.

காலஞ்சென்ற குரவரின்மூலமாக நாம் அடைந்துள்ள கணக்கில்லாத வரப்பிரசாதங்களுக்காகத் தேவனுக்கு நன்றிதெரிவித்து, குரவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்வது எமதுகடன்.

R. I. P.

## தோமாஸ்முனிவர் பிரிவு

மின்னுமெங்கள் திருமறையின் குரவர் சோதி;
மடாதிபதி; மௌனகுரு; சாங்கோ பாங்க
உன்னதத்தில் உயர்ந்தநிலை காட்டும் ஞானி;
உடலொட்டுந் தவக்கோலத் தன்மையாளன்;
வன்னநிலைத் தோலகட்டித் தபோ வனத்தின்
வாய்பேசாப் பிரசங்கவள்ளல் தோமாஸ்
பொன்னுலக வாழ்வெய்தப் பிரிந்தார் அந்தோ;
புகழுடம்பு என்றென்றும் நிலவுந் தானே.

கருணையங் கடவுள் கிருபையா லுயர்ந்த
கடுந்தவக் குரவருட் சிறந்த
திருமவர் தோமாஸ் சுவாமிதன் நற்பெயர்
திகழவே மக்களின் மனத்துள்
மருவியே நிலைத்து மறக்கவே இயலா
மாண்பினைப் பெற்றவ ராகும்.
அருட்குரு தோமஸ் அந்தண ரிறந்தார்
அவர்பதம் தோத்திரிப் போமே.

குருக்கள் கோத்திரம் செய்த புண்ணியம்
திரண் டெழுந்த உருவமே
பெருக்க மற்ற முனிவர் தம்மின்;
பான்மை வீக்கும் வடிவமே!
உருவின் கீர்த்தி வேத மாட்சி
உணர்த்தி வைத்த தீபமே!
பரமன் யேசு தூதின் சின்னம்!
குரவர் தோமஸ் முனிவரே.

கறையிலாத் தேவ மக்களு மல்லால்
மறுமறை யாளரும் நினது
புறநிலை அறிவர் அகநிலை அறிவர்
புண்ணியம் கண்ணியம் அறிவர்
மறைமொழி நயமும் வாய்மையும் அறிவர்
மாண்புறு தவநிலை அறிவர்
நிறையொளிர் மறையின் சுடரென மிளிர்ந்த
மேன்மையை யாமறி கிலமே!

[ பண்டிதர் ஆசிநாதன் ]

**பொதுக்கருத்து:**

**மீண்டும் ஒன்றுசேரக் கிறிஸ்தவர்கள்யாவரும் செபித்துஉழைப்பதற்காக வேண்டிக்கொள்வது.**

**மிஷன் கருத்து:**

**பரிசுத்த சுவிசேஷம் ஆசியநாடுகளில் ஒரு தடையுமின்றிப் பிரசங்கிக்கப் படுவதற்காக மன்றாடிக் கொள்வது.**

தோலகட்டி ஆச்சிரமத்தைச்சேர்ந்த செபமாலைத் தாசர்சபைச் சகோதரர்கள் பல்வேறு தொழில்துறைகளிலும் ஈடுபட்டிருப்பதை இப் படங்களில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

சகோதரிகளே, வணக்கம்!

அன்னைமரி தமது திவ்விய குமாரனைத் தேவாலயத்தில் காணிக்கையாக்கிய அற்புதத் திருநாள் இதோ சமீபித்துவிட்டது. தாய்மையின் கடமைகள், பெருமைகள், தியாகவாழ்வு, தன்னலங்கருதாமை ஆகிய நற்பண்புகளை இத் திருநாளில் தேவதாயார் நமக்கு எடுத்துக்காட்டுகின்ருள்.

தாய்மையின் பெருமையை விளக்கும் இரு கட்டுரைகள் இன்றைய மகளிர் மன்றத்தை அலங்கரிக்கின்றன. இக்கதைகள் இரண்டும் விளக்கும் உண்மைகள் நம் உள்ளத்திலே பதியட்டும்.

ரோஜா.

## அன்னை என்பவள் நீ தானே?

மங்கையர் மூவர் கூடினர் மல்லிகாவின் முற்றத்தில். அடுத்தவீட்டு அம்மையார் மங்களத்தைப்பற்றிய விஷயங்கள் அலசப்பட்டன அம்மகாநாட்டில். "எவ்வளவு நல்ல ஒரு அம்மையார் அந்த மங்களம். ஆனுல், பாரேன்! அவளது பிள்ளைகள் ஒருவராவது அவளைக் கவனிப்பதில்லையே" என்று ஆரம்பித்தாள் விமலி. பிள்ளைகள் தான் திரும்பியும் பார்ப்பதில்லை. ஆனுல் அந்தமங்களத்திடம் போனுல் தன் பிள்ளைகளுடைய புகைப்படங்களைக் காட்டிக் காட்டி எவ்வளவு அன்பாக அவர்களுடைய கதையைக் கூறுகிருள். இதுதான் சொல்வது பெற்ற மனம் பித்து, பிள்ளைமனம் கல்லு என்று" எனப் பக்கப்பாட்டுப் பாடினுள் திருமதி நிர்மலா பாஸ்கரன். மல்லிகா ஏதோ கூற வாயெடுத்தாள். அதற்குள் இவர்களது நாக்குகள் பதம் பார்த்துக் கொண்டிருந்த அதே அம்மையார் அங்கே வந்துகொண்டிருந்தாள். தாம் பேசியவற்றை எண்ணி ஒருகணம் நாணினர் அம்மூவரும். ஏன்தெரியுமா?

மங்களா என்ருல் அவ்வட்டாரத்தில் யாவருக்குமே அவள் மாமிதான். எவ்வீட்டில் உதவிதேவையோ அங்கே அவளைக் காணலாம். தன் தள்ளாத உடம்பையும் இழுத்துக்கொண்டு, தலைவலிப்போர்க்கு ஒத்தடம் கொடுக்கவும், நோயாளருக்கு சிகிச்சைசெய்யவும், கல்யாணவீடுகளில் பலகாரம் செய்யவும், மாணவீடுகளில் இராக்காவலுக்குமாக முன்நிற்பாள் மங்களம் மாமி.

"மாமி! இப்போதுதான் மல்லிகாவுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்; உங்களுடைய பிள்ளைகள் உங்களைக் கவனியாதிருப்பது எவ்வளவு வெட்கக்கேடானசெயலென்று" என்று முறையிட்டாள் விமலி. மங்களம்மாமி ஒரு கணம் திகைத்தாள். அப்புறம், "அவர்கள் என்ன செய்யமுடியும். மூத்தவன் வாசு பம்பாயில் ஓய்வு ஒழிச்சலின்றிப் பரிசோதகராக வேலைபார்க்கிருன். அடுத்தவள் ராஜி நாலுஐந்து குழந்தைகளுடன், அவர்களுக்கு உணவூட்டவும், பள்ளிக்கனுப்பவும், கணவருக்குஆவன செய்து வேலைக்கனுப்பவுமே அவளுக்குப் பொழுது போதவில்லை. மற்றவன் ஜோதி இந்தியாவில் இன்னமும் பயிற்சி முடிக்கவில்லையே" என்ருள். "ஏன்மாமி கடந்த 2 வருடகாலமாக உங்களுக்கு அரைடசின் கடிதங்கள்கூட வந்ததில்லையே. பேனைக்கும், மைக்கும், கடுதாசிக்கும், முத்திரைக்கும் அதிகமா செலவழிந்துபோய்விடும்" என்ருள் மல்லிகா. "எனது மகள் மணி இருக்கிருளே டில்லியில். கிழமைக்கு மூன்று கடிதமாவது எழுதுவாளே!" என்று பதம் பாடினுள் திருமதிபாஸ்கரன். "எனக்கு தனிமையென்றில்லை. சிலகாலம் அவரும் இறந்துபோனபின் இப்பிள்ளைகளோடு கஷ்டப்பட்டேன். அவர்கள் மூன்னுக்கு வந்துவிட்டார்கள். இப்பொழுது நான் ஓய்வு எடுக்கவேண்டாமா? என்று கூறிச் சமாளித்தாள் மங்களம் மாமி. ஆனுலும் அவர்கள் நாவினுல் சுட்டபுண் அத்தாயின் இதயத்தில் ஆழப்பதிந்தது.

அடுத்த சிலவாரங்கள் கழிந்தன. நாளுக்கொரு கடிதம், கிழமைக்கொரு பார்சல், மாதத்தில் இரு காசோலைகள் என்றெல்லாம் வந்து குவிந்து கொண்டிருந்தன மங்களத்துக்கு. மூக்கில் விரலைவைத்து யோசித்தனர் அயல்வீட்டுப் பெண்கள். பலகாரவர்க்கங்கள், திராட்சைப்பழங்கள் என அப்பெண்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாள் அந்த அன்னை. ஏது? உங்கள் பிள்ளைகளுக்குக் கருணை பிறந்துவிட்டதோ! என்ருலும் தாயை மறப்பார்களா? என்று கூறினர் அப்பெண்கள். "இந்த மங்களத்தின் பிள்ளைகளா? தாயைக் கவனியாமல் விடுவார்கள்" என்று தலைநிமிர்ந்து கூறினுள் மங்களம்.

மேலும் சில மாதங்கள் கழிந்தன. ஒருநாள் மாமியின் உதவியை நாடி மல்லிகா வந்தாள் மங்களத்திடம். பேச்சுமூச்சற்று கட்டிலில் கிடந்த மங்களத்தைக் கண்டு திகைத்தாள். ஓடிப்போய் அயலவரைக் கூட்டிவந்தாள். வைத்தியர் வந்தார். கைநாடியைப் பரிசோதித்தார். "உணவின்மையாலும், மனவருத்தத்தாலும் உடல் தளர்ந்துவிட்டது" என்று கூறிச் சில மருந்துகளைக் கொடுத்தார். "வைத்தியர் சொல்வது பொய். அந்தப் பிள்ளைகள் எவ்வளவு உணவுப் பொருட்கள் அனுப்பினுர்கள். நாள் தவறினுலும் கடிதம் தவருதே. இது வயோதிபகாலவருத்தம்" என்று அடித்தோதினுள் திருமதி பாஸ்கரன். ஒருகணம் கண்ணைத் திறந்த மங்களம் மாமியின் உள்ளத்தில் இச்சொற்கள் தேனமுதாகப் பொழிந்தன

பிள்ளைகள் மூவருக்கும் செய்தி அனுப்பினர். மூன்று நாட்களுள் வந்து சேர்ந்தனர். குடும்பசமேதராய், அம்மாவின் நிலை கண்டு அதிர்ந்து விட்டனர். அன்னை தனியாக அதிகம் கஷ்டப்பட்டிருக்கிருள் என்பதை அப்போதுதான் உணர்ந்தனர். ஆனுல், அயல்வீட்டுப் பெண்கள் அவர்கள் அதிக தூரத்திலிருந்தும் அன்னைக்கு ஆவன செய்தார்கள் எனப் புகழ்ந்து கூறியதன் மர்மம் தான் அவர்களுக்கு விளங்கவில்லை.

வைத்தியரின் கைவரிசையும் மக்களின் அருகாமையும் மங்களம் அம்மாளை எழுப்பிவிட்டது. இனியும் அவளைத் தனியத் தவிக்கவிடலாகாது என உணர்ந்த ராஜி அவளைத் தன்னுடன் அழைத்துப்போக முன்வந்தாள். அம்மாவின் உடைகள் மற்றும் பொருட்களை அடுக்குவதில் முனைந்தனர் பிள்ளைகள் மூவரும். அவர்கள் கண்டதென்ன? தாம் எழுதியது போல் அம்மாவுக்கு அனுப்பப்பட்ட காகித உறைகள், "அருமை அம்மாவுக்கு ராஜியிடமிருந்து," "அன்பு அன்னைக்கு ஜோதியின் அன்பளிப்பு," "பிரிய அன்னைக்கு வாசுவின் மனைவியின் கையினுல் செய்த சிறுவண்டிகள்" என்பன போன்ற வாசகர்களடங்கிய பார்சல் அட்டைகள், மணியார்டர் மேலுறைகள் முதலியன. அயலவர் தம்மைப்பற்றி அவதூறு பேசக்கூடாது என்பதற்காக அன்னை கையாண்ட தந்திரங்கள் அவர்களுக்குப் புரிந்தன. அயல்வீட்டுப் பெண்கள் தம்மைப் போற்றியதன் மர்மத்தையும் உணர்ந்தனர். தங்கள் அன்னை தனது உணவைத் தியாகம் செய்து அப்பணத்தை தம்மானத்தைக் காப்பாற்றச் செலவிட்டதியாகத்தைக் கண் முன்னுல் கண்ட அவர்கள் உள்ளம் "அன்னை என்பவள் நீ தானு" என்று கூருமல் கூறிற்று.

## வாரும் நேச யேசுவே!.....

நீர் வரவில்லையெனில் ஆதரவேது
வாடிய இதயம் வாடாமல் வாழ்ந்திட
நீர் வரவில்லையெனில் அன்பைப் பொழிந்தே
வளமுற வளர்ப்பவர் யார் இந்த உலகிலே?
நீர் வரவில்லையெனில்......

* * *

நீர் வரவில்லையெனில் நீசன் என் தோஷம்
நினையாது பொறுத்தே நீக்குவார் யாரோ?
நிலைபெரு உலகில் நீங்கிடாத் துன்பம்
நீக்கியே இன்பம் அளிப்பதும் யாரோ?
நீர் வரவில்லையெனில்......

* * *

நீர் வரவில்லையெனில் மறுமையின்பத்தை
இம்மையில் நானும் சுகிப்பதுமேது?
நிம்மதியின்பம் என்பதும் ஏது?
நிலையாய் வாழ்வில் நிற்பதும் ஏது?
நீர் வரவில்லையெனில்......

* * *

நீர் வரவில்லையெனில் வேண்டிடும் வரங்கள்
பெற்றிட யானும் செல்வதும் எங்கே?
ஆசைகள் பொங்க வீசிடும் காற்றில்
அலைந்திடும் கொடியாள் சாய்வதும் எங்கே?
நீர் வரவில்லையெனில்......

* * *

வானவர் போற்றும் வியத்தகு விருந்தே?
வானின் றிறங்கிய தேனமுதே!
நீர் வரவில்லையெனில் இதயங் கனிந்தே
ஜீவநாதம் எழுவதும் ஏது!
நீர் வரவில்லையெனில்......

## தாய்மையின் தனிச்சிறப்பு

லலிதாவின் வெண்டைக்காய்ப்பிஞ்சு போன்ற விரல்கள் தூரிகையைப் பிடித்துக் கொண்டிருந்தன. முன்னுலிருந்த ஓவியத் திரையில் அழகியவோர் திருக்குடும்பத்தின் படம் அமைந்துகொண்டிருந்தது. எல்லா உருவங்களும் தனிச்சிறப்புடன் அமைந்து கொண்டிருந்தன. ஆனுல்,...ஆனுல்,...ஏனே தேவதாயினதும திவ்விய பாலனதும் வதனங்கள் அவள் நினைத்தவாறு அமையத் தவறின. இவ்வருட கண்காட்சியில் பரிசைத் தட்ட வேண்டும் என்றஅவா அவளுக்கு. கிறிஸ்மஸும் நெருங்கியது. ஆனுல், அவள் மனக்கோட்டை நிறைவேருது போலல்லவா இருக்கிறது.

அலுத்தவாறே திரும்பிப் பார்த்தாள். அவள் கணவன் ரவி அவளது கஷ்டத்தை அவதானித்தவாறு நின்று கொண்டிருந்தாள். "லல்லி! உனது ஓவியம் பரிசைத் தட்டுமா" என்று அன்புடன் வினவினுன். போங்கள்! நானும் இந்த இருவரது முகத்தைவரைய முடியாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் பாருங்கள். ஏனே இவை சரிவருகிறதில்லை" என்ருள் லலிதா. "ஏன் பார்க்க நன்ருகத்தானிருக்கிறதே" என்ருன் ரவி. "உண்மையில் மாட்டுக் கொட்டிலும் திருக்குடும்பமும் மற்றக் காட்சிகளும் நன்ருகத் தானிருந்தன. ஆனுல், மரியாயின் முகத்தில் தாய்மையையும், பாலனின் முகத்தில் மாசற்ற தெய்வீகத் தன்மையையும் பிரதிபலிக்கச் செய்ய முயலுகிறேன். அது தான் கைகூடவில்லையே" என அழுவாரில் ஒருவளாகக் கூறினுள் லலிதா. ரவி அவள் பேச்சைக் கேட்டான். "ஒருவேளை தாய்மையையடையாத பெண்ணுக்கு அத்தன்மைகளைக் கையினுலும் பிரதிபலிக்கச் செய்யமுடியாதோ? என்னவோ?" என்று விரக்தியுடன் கூறிவிட்டு வெளியேறினுன்.

லலிதாவின் முகம் அவமானத்தால் சிவந்தது. ஆம் அவள் ஒரு நவநாகரிக மங்கை. குழந்தைப் பேற்றை விரும்பாதவள். குழந்தைகள் பிறந்தால் தன் அழகு மங்கிவிடும் என்ற மடமை எண்ணம்கொண்டவள். குழந்தைகள் தன் ஓவியமுன்னேற்றத்துக்கு தடையாக கரைச்சல் கொடுப்பார்கள் என்ற ஐயம் வேறு. மழலைமொழி கேட்க விரும்பிய ரவி அவள் கொள்கைகளை வெறுத்தான். ஆகவே தான் அவனது சொற்கள் அவள் மனதில் அம்பெனப் பாய்ந்தன.

கிறிஸ்மஸ் வந்துபோனது. அவளது ஓவியமோ அவள் நினைத்தபடி முற்றுப் பெறவில்லை. கண்காட்சியிலும் இடம் பெறவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக அவளுக்கு வாழ்க்கையே சுமைபோல் தோன்றினது. இன்னதென்று தெரியாத ஓர் ஏக்கம். ஓவியம் வரைவது கூட அவளுக்கு விரும்பத் தகாதது ஒன்ருகிவிட்டது. காலமோடியது. அவளது ஏக்கம் அன்புக் கணவனின் அரவணைப்பால் மாறிவிட்டது. இன்னும் மூன்றே மூன்று மாதங்களில் அவள் ஒரு தாய். மழலை மொழி பேசும் ஓர் ஓவியம், அந்த வீட்டில் சிற்றடி பயிலும். ஆம். அவளது நாகரிகப்பண்பு படிப்படியாக மாறியது. இன்று அவளே தன்பேசும் பொற்சித்திரம் எப்போது வரும்என்று எதிர்பார்க்கத் தொடங்கி விட்டாள்.

தங்கப்பசுமையென அவள் கைகளில் தவழ்ந்தது ஓர் ஆண் குழந்தை. அவள் மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை. ரவியின் உள்ளமும் பூரிப்பால் நிரம்பி வழிந்தது. இப்பால்வடியும் வதனத்துக்காக எதைத்தான் தியாகம் செய்ய

(தொடர்ச்சி 7-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் யார்?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடிஒழிந்து நிற்பது வழக்கம். ஆயினும் இத்துணைச் சகோதரர் கோபம் கொள்வதில்லை.

தேவதாயின் மேல் அவருக்கிருந்த அன்பு அளவு கடந்தது. அவவின் பெயரைக் கேட்டாலே மகிழ்ச்சியின் சிகரத்தை அடைவார். ஓய்வு நேரங்களில் அதிக செபமாலை சொல்லிவந்ததால் அவருடைய பெருவிரலும் ஆள்காட்டிவிரலும் காய்த்துப் போய்விட்டன என்று அவருடன் பழகியோர் கூறுவர். தேவதாயின் அமல உற்பவம் அக்காலத்தில் ஒரு சத்தியமாகப் பிரகடனம் செய்யப்படாவிடினும் அந்தப் பற்றி இவர் நம்பி வந்தார்; மற்றவர்கட்கும் எடுத்துக் கூறுவார். இதை இவர் தேவதாயிடமிருந்தே அறிந்தார்.

இப்படியே இத் துணைச்சகோதரர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் தேவ அன்பிலும், அவர் பற்றிலும், அவர் நேசத்திலும் வளர்ந்து வந்தார். ஆண்டுகள் மறைய மறைய அவர் தேவ நேசச் சுவாலையினால் பற்றி எரியப்பட்டார். தேவ அன்பு அவர் ஆத்துமத்தை எரியச் செய்தது. விசுவாசம் நம்பிக்கை, தேவசிநேகம் என்பன என்றும் அதிகரித்து வந்தன, நாளடைவில் படித்துப் பட்டம் பெற்ற குருக்களைவிட ஞான காரியத்தை நன்ருக அறிந்திருந்தார்.

எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்த போதிலும் இச்சகோதரர் எல்லோருக்கும் பணிந்து நடப்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டார். மற்றவர்களின் கட்டளையை கடவுளின் கட்டளையாகச் சிரமேற்கொண்டு நடந்தார். புனிதர் ஒருநாள் எழுபது வயதாயிருக்கும்போது அவருடைய தலைவர் அவரைப்பார்த்து நீ இந்தியா தேசம்போக வேண்டும் என்று கூறியவுடனே இவர் புறப்பட்டுவிட்டார். இப்படி இவர் எவ்வேளையிலும் கீழ்ப்படிதலாய் நடந்துவந்தார்.

இப்புனிதர் 1917-ம்ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம்தேதி தம் 86-ம் வயதில் பரமபதம் அடைந்தார். இவர் பிறக்கும் போது பரிசுத்தராய்ப் பிறக்கவில்லை. உலக இன்ப துன்பங்களை தம் முப்பத்தெட்டாம் வயதுவரை நன்ருக அனுபவித்தார். ஆனால், உலகின் இன்பம் இவருக்கு மனநிம்மதி அளிக்கவில்லை. கடவுளின் அன்பைச் சுவைக்கின்ருர். அதன் பெருமையை அறிகின்ருர். அது வாடாமல்லிகைபோல என்றும் வாடாமலிருந்தது

இவர் பெரும் பெரும் காரியங்களைச் செய்யவில்லை; பெரிய சபைகளை ஏற்படுத்தவில்லை; ஊர் உலகம்சென்று போதிக்கவில்லை. ஆனால், சிறு சிறு காரியங்களைத் திருந்தச் செய்தார்; கடவுளுக்காகச் செய்தார். இவரே யேசுசபைத் துணைச் சகோதரர்களின் எடுத்துக்காட்டு; அவர்களின் முன்மாதிரிகை. இப்புனிதரிடம் நாமும் சிறுசிறு காரியங்களில் என்றும் பிரமாணிக்கமாய்இருக்க மன்ருடுவோம்.

"பாக்கியம்"

## வித்தியாதிபதியால்
## அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ற
# ஞானோபதேச நூல்கள்

| | | |
|---|---|---|
| பாலர் வகுப்பு (அல்லது 1-ம் வகுப்பு) | — பாலர் குறிப்பிடம் | 40 |
| 2-ம் வகுப்பு | — முதல்நன்மைக் குறிப்பிடம் | (அச்சில்) |
| 3-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் I-ம் பாகம் | 1-00 |
| 4-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் II-ம் பாகம் | 1-30 |
| 5-ம் வகுப்பு | — சின்னக்குறிப்பிடம் | 1-60 |
| 6-ம் வகுபபு | — பெரியகுறிப்பிடம் I-ம் பாகம் | (அச்சில்) |
| 7-ம் வகுப்பு | — பெரியகுறிப்பிடம் II-ம் பாகம் | (அச்சில்) |
| 8-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் | 2-00 |
| | கிறிஸ்துநாதர் சிவியசரிதை (சுருக்கம்) | 1-50 |
| க. பொ. த. ப. (சாதாரண) ஆயத்த வகுப்பு | — 1. மாணவர் கிறிஸ்தவ போதகம் I-ம் பாகம் | 1-25 |
| | 2. அர்ச். லூக்காஸ்சுவிசேஷம் | 1-50 |
| க. பொ. த. ப. (சாதாரண) வகுப்பு | — அர்ச். மாற்கு சுவிசேஷம் | 1-50 |
| | மாணவர் கிறிஸ்தவ போதகம் II-ம் பாகம் | 2-50 |
| | ,, ,, III-ம் பாகம் | 2-50 |
| உ. பா. த. ப. ஆயத்த வகுப்பு | — 1. அப்போஸ்தலருடைய நடபடிகள் | 1-25 |
| | 2. மூலாதார வேத விளக்கம் | அச்சில் |
| உ. பா. த. ப. வகுப்பு | — அப்போஸ்தலருடைய நடபடிகள் | 1-25 |
| | சத்தியவேத தர்ப்பணம் 1-ம் காண்டம் | 2-50 |

கிடைக்குமிடம்:

அர்ச். சூசைமாமுனிவர் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

**"அலெக்சாந்தர், செசார், ஷார்ல்மேன் என்னும் அரசர்பெருமான்களும், நானும்கூட பெரிய இராட்சியங்களை ஸ்தாபித்திருக்கிரேம். எங்கள் அரசாட்சிகளெல்லாம் படைப்பலத்தினுல் உண்டானவை; கிறிஸ்து ஒருவரே அன்பினுல் அரசாட்சியை நிறுவினர்." —நெப்போலியன்.**

## தேவை

வட இலங்கையிலுள்ள சில தென்னந் தோட்டங்களுக்கு மேற்பார்வையாளராகப் பயிற்றப்பட ஏறக்குறைய மூப்பது வயதான ஓர் ஆள் தேவை. விண்ணப்பம் செய்வோர் இரசாயன சாஸ்திரம் (Chemistry), தாவரசாஸ்திரம் (Botany), உட்பட எஸ். எஸ். சி. (S. S. C.) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாயிருக்கவேண்டும். தமிழில் போதிய அறிவும், சிங்களத்தில் கருமமாற்றக்கூடிய தகுதியும் உடையவராயிருத்தல் அவசியம். பரீட்சைக்காலச் செலவுகள் கொடுக்கப்படும்.

விரும்பினோர் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பரப்படுத்துவோர்,**
**தபாற்பெட்டி இல. 2,**
**யாழ்ப்பாணம்.**

## புளியந்தீவு

26-1-64 ஞாயிறவாரம் "பாலர்களின் விசேஷதினம்." அன்று காலை இரு பூசைகளிலும், கட்டளைக் குரு வண. யோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்கள், பாலர்கள் எப்படி தங்கள் வாழ்நாளைக் கழிக்கவேண்டுமென்ற நற்கிருத்தியங்களைப் பற்றி எடுத்துரைத்தார். குறிப்பாக விசுவாசப்பரப்புதல்சபை எப்படி வளர்ந்தோருக்கு ஒரு விசேஷ சபையாயிருக்கின்றதோ அதேபோல் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பாலர்களுக்கும் இது ஒரு விசேஷசபையாக இருக்கவேண்டுமென்று கூறினர். விசுவாசப் பரப்புதல்சபைக்கு ஏனைய வருடங்களைப் பார்க்கிலும் இவ்வருடம் 3200/- ரூபா நிதிசேர்த்துக் கொடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. மாலை 4-00 மணிக்கு அர்ச். சூசையப்பர் கன்னிகாமடத்திலிருந்து ஏராளமான சனங்களும், பாலர்களும் தங்கள் கரங்களில் பாப்பரசருடைய கொடியையேந்திச்செல்ல, பாலனுடைய திருச்சுரூபம் பக்தர்களினூடே பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியநாயகி தேவாலயத்தை வந்தடைந்தது. பின்னர் நடந்தேறிய சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும், திவ்விய பாலனுடைய சுரூபஆசீருடனும் திருநாள் முடிவுற்றது.

**வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல்**
**அவர்கள்**
**பரமபதமடைந்த**

### 3-ம் வருட ஞாபகம்

**தோற்றம்: 12-2-1889** **மறைவு: 4-2-1961**

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

இவரது ஆன்மசாந்திக்காக சில்லாலை, பரி ஆரோக்கியமாதா ஆலயத்தில் ஒரு திக்கப் பாடற்பூசை 4-2-64-ல் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிருேம். முடிவில்லாப் பேரொளி இவர் மீது ஒளிர்வதாக.

சில்லாலை

### கேர்த்தியின் பூர்த்தி

யேசுமரி சூசையின் இரக்கத்தினுலும் பரி. சதாசகாய மாதாவின் அருளினுலும் யாவராலும் கைவிடப்பட்ட அர்ச். யூதாததேயுவினதும் அந்தோனி முனியோரினதும் சம்பேதருவினதும் வேண்டுதலினுலும் எங்களுக்கு வந்த தீராத நோய் நீங்கிச் சுகமுற்ருேம். எங்களுக்கு இருக்கும் கடன்களும் துன்பங்களும் தீரும் என்னும் நம்பிக்கையுடன் எங்கள் நன்றியை இத்தால் அறிக்கையிடுகின்ருேம், இதைப் பிரசுரிக்க பிந்தியதற்கு மன்னிப்புக்கோருகிருேம்.

அன்னையின் அடியாள்.

## ஐக்கிய திருச்சபை...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

டனும், தாழ்மையுடனும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சாதாரண வாழ்க்கையில் "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே-நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே" என்ற மொழிகள் சமயத்துறையிலும் உண்மையானவையே.

**இரண்டாவதாக** எங்களையே நாங்கள் தூய்மைப்படுத்திப் பிற கிறிஸ்தவ (சமய)மக்களில் எங்களுக்கு இருக்கும் வெறுப்பு மனப்பான்மையை வேரோடு அழித்து நாமெல்லோரும் ஒரு பிதாவாகிய சருவேசுரனின் பிள்ளைகள்; ஒரே சுதனுகிய சருவேசுரனின் போதனைகளைப் பின்பற்றும் சகோதரர்கள்; ஒரே கருணை சமுத்திரமாகிய இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் வரப்பிரசாதங்களைப் பெற்றுப் பரலோகபாதையில் பிரயாணம் செய்யும் சகபாடிகள் என்ற ஒருவிரிந்த மனப்பான்மையை எங்களில் வளர்த்து, எல்லோருடனும் ஒற்றுமையாயும், சமாதானமாயும் வாழப் பழக வேண்டும்—வாழவேண்டும்.

**மூன்ருவதாக** அரியபுண்ணியமாகிய பிறர்சிநேகம் என்ற தீயை எங்களில் மூட்டி, அது சுவாலித்தெரிந்து எங்களிலுள்ள சுயபற்று அறவே ஒழிந்து, எங்களிலுள்ள சாதி, நிறம், சமயம், மொழிபோன்ற பலவித பிளவுகள் துவேசங்கள் அகன்று, எங்களிலுள்ள பலவித பிறர்சிநேகத்துக்கெதிரான குற்றங்குறைகளையெல்லாம் முற்ருகப்போக்கி, எங்களைப் புதிய புனித சிறந்த கிறிஸ்தவர்களாக்க நாங்கள் அல்லும்பகலும் அயராது உழைத்துவர வேண்டும். அப்போது உண்மையாகவே இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் நோக்கங்கள் நிறைவேறும். உலகில் யேசுநாதசுவாமி தாமே கூறியவாறு ஓர் ஐக்கியதிருச்சபை உண்டாகி, "ஒரேமந்தையும் ஒருமேய்ப்பனும்" சமயத்துறையில இவ்வுலகில் தோன்றும்.

பி. ச.

## தாய்மையின் தனி...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

முடியாது என்று எண்ணினுள் லலிதா. வீணுக ஆறு வருடங்களை ஓடிவிட்டோமே என்று கவலைப்பட்டாள்.

அன்று குழந்தை ஞானமுழுக்குப் பெற்று வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டாள். கையில்வாங்கி மடிமீது வளர்த்தினுள். அதன் முகத்தில் தான் என்ன தெய்வீகப் பிரகாசம். தாய்மை நிரம்பி வழிய தன் குழந்தையை உற்று நோக்கினுள் அந்த அன்னை. ரவி உள்ளே வந்தான். "லல்லி! நீ தேடினுயே தாய்மையையும் தெய்வீகத்தையும் அதோ நிமிர்ந்துபார் எதிரேயுள்ள கண்ணுடியில்" என்ருன்.

நிமிர்ந்து பார்த்தாள்—தன்முகத்தில் ததும்பும் தாய்மையின் அழகையும் தன் குழந்தையின் முகத்தின் தெய்வீகத்தையும் கண்ணுடி பிரதிபலிப்பதைப் பார்த்தாள், அதிசயித்தாள். அந்த ஓவியம் அவள் கற்பனையில் பதிந்தது.

நாட்கள் சென்றன. பூரணபெலம் பெற்றவுடன் ஒருநாள் அமர்ந்தாள் தன் ஓவியத் திரையின்முன். பூரணத்துவம் பெருத அந்த ஓவியம் சில விநாடிகளில் அழகுபெற மிளிர்ந்தது. கற்பனையில் பதிந்த, கண்முன்னுல் கண்ட, தாய்மையையும், தெய்வீகத்தையும் திரைச்சீலையில் அவ்வித கஷ்டமின்றி வடித்தாள் அந்த ஓவிய மேதை.

அடுத்த கிறிஸ்கஸ் நெருங்கியது. அவளது ஓவியம் முதலிடம் பெற்றது. யாவர் புகழையும் ஈட்டியது. ஆனுல், அவளது மழலைச் சிறுவனின் அரவணைப்பு இன்பத்திற்குமுன் இப்பரிசுகளெல்லாம் எம்மாத்திரம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9-ம் பத்திநாத பாப்பரசர்

**இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டுவதில் அருளப்பதந்தை முயற்சிகள் எடுத்தது போல முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டுவதில் அதிகசிரத்தை காட்டியவர் ஒன்பதாம் பத்திநாத பாப்பரசராவர். அவரது வரலாற்றை ஆராய்கிறது இக்கட்டுரை.**

இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் திருச்சபைத்தலைமைப் பதவியில் அதிககாலம் அரசாண்டவர் என்ற கௌரவம் பெறுபவர் ஒன்பதாம் பத்திநாதர். அவரது ஆட்சிக் காலம் முழுவதுமே இன்னல்கள் நிரம்பியது.

மிகுந்த ஏழ்மையைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தவர் அவர். தமக்குரிமையானவை அனைத்தையுமே ஏழைகளுக்கு வழங்கிவிட்டவர். பாப்பு தேர்தலுக்குச் செல்லும் பிரயாணச் செலவாச அறுநூறு கிரவுண் நாணயங்களை நண்பரொருவரிடம் கடனாக வாங்கநேரிட்டதெனில் இவரது நிதிநிலைமையை நாம் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

1792-ல் பிறந்தார். இளவயதிலேயே பாப்புவின் காவல்வீரராகவர ஆசைகொண்டார். விண்ணப்பித்தபோது ஆரோக்கியநிலை காரணமாகத் திருப்பிவிட்டனர் பாப்புவின் படையணி அதிகாரிகள்.

எனவே ரோமையிலுள்ள குருத்துவ பயிற்சிக் கழகமொன்றில் இணைந்தார். வேதசாஸ்திரத்தில் வல்லுநரானார். 5 வருடங்களின் பின்னால் குருத்துவாபிஷேகம்பெற்று வெளியேறினார்.

அநாதசாலையொன்றின் நிர்வாகியானார். சிலவருடங்கள் கழிந்தன. தென் அமெரிக்காவிலுள்ள சிலி தேசத்தில் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியின் காரியஸ்தர்பணி இவரைத் தேடிவந்தது. 1825-ல் மீண்டும் ரோமைக்கு வந்தார்.

அன்று திருச்சபைத் தலைவராயிருந்தவர் ஏழாவது சிங்கராயர். இவரது நெருங்கிய நண்பர். இவரைச் சாந்தமைக்கேல் மருத்துவமனையின் நிர்வாகியாக நியமித்தார். இருவருடங்கள் சென்றன.

ஸ்பொலெட்டொ நகரின் அதிமேற்றிராணியானார். அவரது நிர்வாகத்திறமை, அரசியல் அனுபவம் அனைத்தும் பகிரங்கமாயின. கர்தினால் பதவியும் தேடிவந்தது. அப்போது அவருக்குவயது 30.

1846-ல் பதினாறுவது கிரகோரி பாப்பு இறைவனடி சேர்ந்தார். கர்தினால்களனைவரும் ரோமை செல்லவேண்டும். கையிலே பணமில்லை. நண்பர்களை நாடிச்சென்றார். ஒருவர் கடனாக அறுநூறு கிரவுண் நாணயங்கள் தர உடன்பட்டார். ரோமைப்பிரயாணம் ஆரம்பமாயது.

கர்தினால்களின் இரகசியக்கூட்டம். அறிவிப்பாளர் மூவரில் இவரும் ஒருவராகத் தெரியப்பட்டார். முதலாமவர் சீட்டை எடுத்துக்கொடுப்பார், அதை இவர் உரத்து வாசித்தபின் மூன்றாமவரிடம் கொடுக்கவேண்டும்.

முதல்வாக்களிப்பு முடிந்தது. சீட்டுக்களை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றிலுள்ள நாமங்களை உரத்து வாசிக்கவேண்டும். சில நாமங்கள் வாசிக்கப்பட்டன. பின்னர் அடுத்த சீட்டு. திடுக்கிட்டார், ஆம் அதிலே அவர் பெயர்.

“பரவாயில்லை; இரண்டொரு கர்தினால் நண்பர்கள் எனதுபெயரை எழுதியிருக்கக்கூடும்” எனத் தம்மைத் தேற்றிக்கொண்டார். ஆயின் நடந்ததென்ன? இன்னும் பன்னிருதடவைகள் தமதுபெயரை வாசிக்கவேண்டியிருந்தது.

“ஆ தேவனே இது என்ன பெரிய சிலுவை, அந்த உன்னத பதவிக்கு எனதுபெயரா?” அடுத்த வாக்களிப்பு வரை அவர்மனம் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தது. தாழ்மை மிகுந்தவர், ஏழ்மையை விரும்பியவர், பாப்பு பதவி தமக்கு வேண்டாமென உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

அடுத்தவாக்களிப்பு, மீண்டும் தமது பெயர். கைகால்கள் பதற, உடல் நடுங்க, குரலிலே பதட்டம்தொனிக்க, கண்கள் நீரை வடிக்க பதினெட்டுத் தடவைகள் தமது நாமத்தை உச்சரித்ததும் தொடர்ந்து அறிவிக்க முடியாதநிலை.

வேறுயாரிடமாவது அறிவிப்பைக் கொடுக்குமாறு கர்தினால்கள் திருச்சங்க தலைவரைக் கெஞ்சி மன்றாடினார், பாப்பு தேர்தல் விதிகள் அதற்கு இடங்கொடா. எனவே சிறிது இளைப்பாறிப் பின்னர் தொடருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

மீண்டும் தொடர்ந்தார். தமது பெயரையே மீண்டும் மீண்டும் உச்சரித்தார். விதிகளை குறிப்பிடும் தொகைக்குமேலாக அவர் வாக்குகளைப் பெற்றிருந்தார். கர்தினால்மார் புதியபாப்புவைச் சுற்றி முழங்காலிட்டனர். அவரோ தாமே முழங்காலிட்டு இறைவனிடம் துணிவையும் நம்பிக்கையையும் இரந்தார்.

திருச்சபைத் தலைவரானதும் ஒன்பதாம் பத்திநாதரின் முதற்பணி அரசியற்கைதிகட்கும் நாடுகடத்தப்பட்டோருக்கும் மன்னிப்பு வழங்கியதுதான். இச்செயல் பின்னர் பலத்த பிரச்சனைகளைக் கொணர்ந்தது.

திருச்சபைக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டிப்பதாக அவரது முதல்நிருபம் விளங்கியது. தப்பறைக் கொள்கைகளையும், விதண்டாவாதங்களையும் பலமாகக் கண்டித்தது அந்நிருபம்.

1848-ல் ரோமைவீதிகளில் நடாத்தப்பட்ட புரட்சியொன்று பாப்புவின் ஆட்சிக்கு ஊறுசெய்தது. மாளிகையிலிருந்த பாப்புவின் காரியதரிசியன்னல்வழியாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். பவேரிய, ஆஸ்திரிய தூதுவர் பாப்புவிடம் அவர் ரோமையில் வசிப்பது பாதுகாப்பற்றதெனத் தெரிவித்தனர்.

எனவே இரகசியமாகக் கெயாட்டாநகருக்குத் தப்பியோடினார் ஒன்பதாம் பத்திநாதர். ரோமையில் தொடர்ந்து கலகம் நடைபெற்றது. சில குருக்களும் மேற்றிராணிமாரும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

மரியன்னையில் அதிகபக்தி கொண்டவர் இப்பாப்பு. கெயாட்டா நகரிலிருந்துகொண்டே கிறிஸ்துவின் மந்தையைப் பரிபாலித்தவர். மரியன்னைக்கு மகத்துவமளிக்கும் பணியொன்றில் ஈடுபட்டார். உலகமடங்கிலுமுள்ள கர்தினால்கட்கும் மேற்றிராணிமாருக்கும் மரியன்னையின் மாசற்ற உற்பவ பிரகடனம்பற்றிக் கடிதங்கள் வரைந்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தார்.

1850-ல் பிரான்சிய துருப்புகள் ரோமையில் பிரவேசித்து அமைதியை நிறுவின. பாப்பு மீண்டும் ரோமை திரும்பினார். அவரது ஆட்சிக்காலம் முழுமையும் பிரச்சனைகளும் பயங்கரங்களும் நிரம்பியதாயமைந்தது. லூர்துபதியில் தேவஅன்னை காட்சி தந்தமை அவர்காலத்திலேயே.

மரியன்னையின் மாசற்ற உற்பவத்தை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார். யேசுநாதரின் இருதயப் பக்திக்கு மகத்தான உதவிதந்தார். மனுக்குலமனைத்தையும் யேசுவின் திரு இருதயத்துக்குப் பகிரங்கமாக ஒப்புக்கொடுத்தார். இங்கிலாந்தில் மீண்டும் கத்தோலிக்க திருச்சபையை ஸ்தாபித்து நடாத்தினார்.

இன்னல்கள் நிரம்பிய அவரது வாழ்க்கையில் தேவஉதவியும் மரியன்னையின் பராமரிப்பும் உடனிருந்தது. அதனால் அவர் துணிவுடனும் வைராக்கியத்துடனும், எதிர்ப்புக்களை எதிர்த்துச் செயலாற்றினார்.

விக்றர் இம்மானுவல் அரசனின் படைகள் ரோமையைக் கவர்ந்தன. பாப்புவின் நாடுகள் உடமைகள் அனைத்தும் கொள்ளையடிக்கப் பட்டன. எனவே தம்மை ரோமையின் மறியற்காரனாக அழைத்துக்கொண்டார் ரோமைக்கு வெளியே வரவும் மறுத்துவிட்டார்.

அவரது மரணத்தின் போதும் மாளிகைக்குவெளியே கலகம் நடந்துகொண்டிருந்தது. தமதுசடலத்தை ரோமைக்குவெளியே புதைக்கும்படி அவர்இறக்குமுன் கேட்டுக் கொண்டார்.

அர்ச். லோரன்சோ மகாலயத்தை நோக்கி பாப்புவின் பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருக்கும் போதும் பிரச்சனைகள் குறுக்கிட்டன. வெளிகொண்ட ஒரு கூட்டம் ஊர்வலத்துள் புகுந்து அட்டகாசம் செய்தது. பாப்புவின் பிரேதத்தை தைபர் நதியினுள் வீசப்போவதாகப் பயமுறுத்தியது.

ஆயின் பாப்புவின் நண்பர்கள் திரண்டெழுந்து இக்காடையர்களை அடித்துக்கலைத்தனர். தமதாட்சிக் காலத்தில் ஒன்பதாம், பத்திநாதர் சாதித்த பல அருச்செயல்கட்குகைம்மாறாக இராயப்பர் மகாலயத்தின் முன்றிலில் அவரது நினைவுச் சிலைஒன்றை நாட்டியுள்ளனர். அர்ச். இராயப்பர்தவிர வேறெந்தப் பாப்புவுக்கும் கிடையாத கௌரவம் இது.

இன்று அவருக்கு அர்ச்சியசிட்ட கௌரவம் வழங்கும் விசாரணை நடைபெற்று வருகிறது. விரைவில் அன்னார் புனிதர்கள் வரிசையில் இடம் பெறக் கூடும்.

— சா. பெ.

> தவறு செய்தவன் தன் தவறை ஒத்துக்கொள்வதற்கு ஒருபோதும் வெட்கப்படலாகாது. அப்படி ஒத்துக் கொள்வதால் முந்தின நாளைவிட இன்று அவன் அதிக அறிஞனென் என்றுதான் பொருள்.


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: “AUTOS” யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: “AUTOS” வவுனியா. டெலிபோன்: 577.


இப்பத்திரிகை 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மாசிமாதம் 1ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org